www.padippakam.com

புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் தத்துவார்த்த ஏடு

# செம்பதாகை

18

ஜுலை – செப்ற்றெம்பர் 2013

## புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் 5வது அனைத்திலங்கை மாநாட்டின் 3வது நிறைபேரவைக் கூட்ட அரசியல் அறிக்கை

## மலையகத் தமிழர்களின் இன அடையாளமும் மொழியும்

ACR ஜோன்

## மலையக மக்களின் சுயநிர்ணய உரிமை

சி. சிவசேகரம்

கவிதைகள்: ஓட்டோ ரெனே கஸ்ற்றியோ, டேவிட் றொபேர்ஸ்

படிப்பகம்

# ஆசிரியர் தலையங்கம்

## தண்ணீரும் செந்நீரும்

*ஓகஸ்ற் முற்பகுதியில் நிகழ்ந்த இரு வன்செயல்களும், ஃபாசிச மிரட்டல் அரச ஒத்துழைப்புடன் வலுவடைந்துவருவதையும் அது முழு நாட்டையும் பற்றுமுன் தடுக்கும் தேவையையும் பற்றிய எச்சரிக்கைகளாம்.*

*கம்பஹ மாவட்டத்தின் வெலிவேரியப் பகுதி மக்கள் தம் குடிநீரின் தரம் சீரழிந்துள்ளதாயும் அதன் காரணம் தம் அயலிலுள்ள ஒரு ரப்பர்க் கையுறைத் தொழிற்சாலையே எனவும் பலகாலமாக அதிகாரிகளிடம் முறையிட்டும் எதுவும் நிகழாததால் ஆர்ப்பாட்டத்திலிறங்கினர். ஒழுங்கும் அமைதியுங் கொண்ட அவ் ஆர்ப்பாட்டத்தைக் கலைக்க ஓகஸ்ற் 1ம் திகதி ஆயதப்படையினர் அனுப்பப்பட்டனர். முதலில் ஊடகவியலாளர்களைத் தாக்கிய படையினர் பின்பு மக்களைத் தாக்கினர். அவ் வெறியாட்டம மூவரைப் பலிகொண்டு 40க்கு மேலானோரைப் படுகாயப்படுத்தியது.*

*2011 மே மாதம் கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைதியான ஆர்ப்பாட்டத்தின்போது ஒரு இளைஞரைப் பலிகொண்ட பொலிஸ் தாக்குதலையும் 2012 பெப்ரவரியில் எரிபொருள் விலை உயர்வை எதிர்த்துச் சிலாபத்தில் நடந்த ஆர்ப்பாட்டத்தின்போது ஒருவரைக் கொன்று எண்மரைப் படுகாயப்படுத்திய பொலிஸ் தாக்குதலையும் இந் நிகழ்வு பலருக்கு நினைவூட்டியது. இம்முறை ராணுவம் தாக்குதலில் ஈடுபட்டமை ஒரு முக்கிய வேறுபாடு. தேவையாயின் இனியும் குறுக்கிடுவதாக ராணுவத் தலைமை கூறியுள்ளமை கவலைக்குரியது.*

*வடக்கிலும் கிழக்கிலும் அன்றாடம் நிகழும் ராணுவக் குறுக்கீடு, போர் முடிந்த பின்பு கூடியுள்ளதையும் ஒரு வருடம் முன்பு வவுனியாச் சிறைக் கலவரத்தை அடக்குகிற பெயரில் நடந்த ராணுவத் தாக்குதலில் இரு தமிழ் இளைஞர்கள் கொல்லப்பட்டதையும் இங்கு நினைவுகூரவேண்டும்.*

*வெலிவேரிய நிகழ்விற்கு 9 நாட்கள் பின்பு, கொழும்பு பாலத்துறைப் பகுதியில் ஒரு பள்ளிவாசலை வெளியிலிருந்து கொண்டுவந்த சிங்கள பவுத்தக் காடையர்கள் தாக்கினர். அயலிலிருந்த முஸ்லிம்களையும் அவர்களின் வீடுகளையும் பாதித்த இத் தாக்குதல், பவுத்த அடிப்படை வாதிகளின் நீண்டகால முஸ்லிம் விரோத வேலைத்திட்டத்தின் ஒரு பகுதிமட்டுமன்றி வெலிவேரிய அசம்பாவிதம் மக்கள் நடுவே எழுப்பியுள்ள கேள்விகளினின்று கவனத்தைத் திருப்பும் ஒரு முயற்சியாகவும் தெரிகிறது.*

எனவே, நாட்டில் உருப்பெற்றுவரும் வன்முறைக் கோலத்தைச், சிங்கள பௌத்தத் தோற்றங் காட்டி, பவுத்த அடிப்படைவாதத்தையும் ராணுவத்தின் ஒரு பிரிவையேனும் இணைக்கும் ஒரு ஃபாசிச அடக்குமறை வேலைத் திட்டத்தின் பகுதியாகவே காண வேண்டியுள்ளது.

மக்களின் அமைதியான போராட்டங்களை ஈவிரக்கமின்றி ஒடுக்கும் பொலிஸும் ராணுவமும் சிங்கள பௌத்தக் குண்டர்கட்குச் சாதகமாகவே இதுவரை குறுக்கிட்டுள்ளமை கவனிக்கத்தக்கது. மனித உரிமைகளையும் போர்க்குற்றங்களையும் பற்றி மிகப் பேசும் அமெரிக்காவும் அதன் ஐரோப்பியக் கூட்டாளிகளும் இதைப் பற்றி ஏதும் பேசவில்லை. சிங்களப் பேரினவாதமும் பௌத்த அடிப்படைவாதமும் அடக்குமுறை இயந்திரமும் இணைந்த ஒரு ஆட்சி ஏகாதிபத்தியத்திற்கு எதிரானதல்ல. மக்களைப் பிளவூட்டுமளவுக்கு, இனப்பகையும் சமூக வன்முறையும் அடக்குமுறை ஆட்சியாளர்கட்கும் அவர்களது அந்நிய எசமானர்கட்கும் வசதியானவை. எனவே அவர்கள் யாவரும் பிளவுகளை ஊக்குவிப்பர்.

இன்று சிங்கள உழைக்கும் மக்களைத் தாக்கி அழிப்பது, வடக்கு-கிழக்கில் தமது உரிமைகளைக் கோரிய தமிழரின் உயிர்களையும் உடைமைகளையும் அழித்த அடக்குமுறை அரச இயந்திரமே என்பதைச் சிங்கள மக்களுக்கு நட்பாயும் ஆதரவாயும் உணர்த்தவேண்டும். தீவிரவாதக் காடையர்களதும் அரசினதும் தொடரான மக்கள்விரோத வன்முறையை — அரசாங்கமே முன்னெடுக்கும் அல்லது கவனிக்க மறுக்கும் — ஜனநாயக, மனித உரிமை, ஊடக சுதந்திர மறுப்புக்களதும் குற்றச் செயல்களினதும் ஊழலினதும் அதிகாரத் துஷ்பிரயோகத்தினதும் எழுச்சியுடன் சேர்த்து நோக்கவேண்டும்.

வடக்கு-கிழக்கில் தேசிய ஒடுக்குமுறையுடன் நெருங்கிய தொடர்புடைய ஜனநாயக, அடிப்படை உரிமைப் பிரச்சனைகள், இன்று தென்னிலங்கை அரசியலின் மையத்திற்கு நகருகின்றன. அவற்றுக்கான போராட்டங்களை முன்னெடுப்பதாயின் ஜனநாயகத்துக்கும் மனித உரிமைகட்குமான போராட்டங்களும் உலகமயமாதலுக்கெதிரான போராட்டமும் தேசிய இன உரிமைக்கான போராட்டங்களும் ஒருங்கிணைய வேண்டும்.

வெலிவேரியவிலும் முள்ளிவாய்க்காலிலும் மக்கள் சிந்திய குருதி ஒன்றே என்ற பாடத்தைச் சுரண்டப்படும் சகல உழைக்கும் மக்களும் ஒடுக்கப் பட்ட தேசிய இனங்களும் உணரவும் ஒன்றுபட்டுப் போராடவும் நேர்மையான இடதுசாரிகள் வழிகாட்டித் தலைமைதாங்க வேண்டும்.

*****

# புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சியின் 5 வது அனைத்திலங்கை மாநாட்டின் 3வது நிறைபேரவைக் கூட்டம்

## 27,28 ஜூலை 2013

# அரசியல் அறிக்கை

**தோழர்களே!**

நாம் புதிய–ஜனநாயக மாக்சிச–லெனினிசக் கட்சியின் 5வது அனைத்திலங்கை மாநாட்டின் மூன்றாவது நிறைபேரவைக் கூட்டத்தில் கூடியிருக்கின்றோம். நாட்டின் சமகால அரசியல் பொருளாதார சமூகப் பண்பாட்டுத் தளங்களில் கட்சியின் மாக்சிச லெனினிச மாஓ சேதுங் சிந்தனை அடிப்படையிலான கொள்கை நிலைப்பாடு பற்றியும் அதன் நடைமுறை முன்னெடுப்புகள் பற்றியும் 2010 யூனில் நடைபெற்ற கட்சியின் 5வது அனைத்திலங்கை மாநாடு தெளிவான கொள்கையை முன்வைத்திருந்தது. அதன் பின், 2011 யூனில் இடம் பெற்ற முதலாவது நிறைபேரவைக் கூட்டத்தில் உடனடியானதும் நீண்ட காலத்திற்குமான வேலைத்திட்டத்தையும் முன்வைத்திருந்தது. அதேபோன்று, 2012 யூனில் நடைபெற்ற இரண்டாவது நிறைபேரவைக் கூட்டம் "கட்சியைப் புரட்சிகர அமைப்பாகக் கட்டியெழுப்புவோம். வெகுஜன வேலைகளை முன்னெடுப் போம்" என்பதனைத் தொனிப்பொருளாக முன்வைத்து நடைபெற்றது. அவற்றிற்கான அறிக்கைகளும் தீர்மானங்களும் வேலைத்திட்டங்களும் இருந்து வருகின்றன. ஆதலால் அவற்றை மீளவும் ஒப்புவித்து விளக்க வேண்டிய அவசியம் இல்லை என மத்திய குழு நம்புகிறது. எனவே மேற்கூறியவற்றின் அடிப்படையில் நாட்டின் அரசியல் பொருளாதார சமூக பண்பாட்டுத் தளங்களில் இடம்பெற்று வந்துள்ள போக்குக்களையும் அவற்றின் மீதான கண்ணோட்டங்களையும் இன்றைய நிறைபேரவைக் கூட்டம் விவாதித்து முடிவுகளை மேற்கொள்ளுவதையே மத்திய குழு தன் கடமையாகக் கொள்கிறது. அதற்கான சுருக்க வடிவிலான அரசியல் அறிக்கை இங்கு முன் வைக்கப்படுகிறது.

**தோழர்களே!**

நாட்டின் இன்றைய அரசியல் நிலையானது நிறைவேற்று அதிகாரத்தின் மிகமோசமான ஜனநாயக விரோத சர்வாதிகாரப் போக்கின் தன்மைகளை மிகத் தெளிவாகவும் அப்பட்டமாகவும் வெளிப்படுத்தி நிற்கிறது. யுத்தம் முடிவடைந்த பின்பான காலப்பகுதியின் தொடர்ச்சியாகக் கடந்த ஒரு வருடகாலத்தில் ராஜபக்ச சகோதரர்களின் குடும்ப ஆட்சியானது முழுமையான ஃபாசிசத்தை நோக்கி வழிநடந்து வந்திருக்கிறது. நாட்டு மக்கள் அனைவரினதும் ஜனநாயக மனித உரிமைகளை மறுத்து நிற்பதிலும் தொழிலாளர்கள் ஊழியர்களின் தொழிற்சங்க உரிமைகளை நிராகரித்து அவர்களது தொழிற்சங்கப் போராட்ட முயற்சிகளை நசுக்குவதிலும் முன்னின்று வருகிறது. அரசியலமைப்புக்கான பதினெட் டாவது திருத்தத்தைக் கொண்டுவந்ததுடன், அதன் அதிகார ஆணவத் துடன் ஜனநாயக விரோத மக்கள்விரோதச் செயற்பாடுகளை ராஜபக்ச குடும்ப ஆட்சியினர் முன்னெடுத்து வருகின்றனர். அதற்கு அவர்கள் பயன்படுத்தும் கருவி, பாராளுமன்றத்தில் வைத்திருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையேயாகும். மாகாண சபைகளுக்குரிய குறைந்த பட்ச அதிகாரங்களைக் கூடப் பிடுங்கி எடுத்துக்கொள்ளும் வகையி லேயே திவிநெகும சட்டமூலம் உயர் நீதிமன்றத் தீர்ப்பையும் துச்சமாக மதித்து நிறைவேற்றப்பட்டது. அதேவேளை, தமக்கு வளைந்து கொடுக்காத 43வது பிரதம நீதியரசரைப் பழிவாங்கும் விதமாக அவர் மீது குற்றப் பிரேரணையைக் கொண்டுவந்து நிறைவேற்றி அவரை அகற்றிக் கொண்டனர். முதலாளித்துவ சட்ட ஆட்சி, அதன் கீழான நீதித் துறை என்பனவற்றை, அவற்றின் சம்மந்தமுடையோரின் கடும் எதிர்ப்புகள் மத்தியிலும் தாம் நினைத்தவாறு கையாண்டு நியமனங்களை வழங்கிக் கொண்டனர். மேற்குறித்த சர்வாதிகாரப் போக்கிலேயே அரசிய லமைப்புக்கான பதின்மூன்றாவது திருத்தத்தை நீர்த்துப்போக வைப்ப தற்கு அல்லது முற்றாகவே அகற்றுவதற்கு ராஜபக்சவின் சகோதரர் ஆட்சி முயன்று நிற்கிறது. இது தமிழ்த் தேசிய இனத்திற்கும் ஏனைய தேசிய இனங்களுக்கும் எதிரான பேரினவாத ஒடுக்குமுறைச் செயற் பாடாகவே காணப்படுகிறது. பதின்மூன்றாவது திருத்தமும் அதன் கீழான மாகாண சபை முறைமையும் தேசிய இனப்பிரச்சினைக்குரிய தீர்வாக அமைய முடியாது. அதில் அதிகாரப் பகிர்வு எதுவும் இல்லை. ஆனால் இலங்கையின் அரசியல் அமைப்பில் தேசிய இனப் பிரச்சினைக்கெனப் பெயரளவிலேனும் சேர்க்கப்பட்ட ஒரே ஒரு விடயம் என்ற நிலையி லாயினும் அது அரசியலமைப்பில் இருப்பது தேசிய இனப் பிரச்சினை யைப் பிரதிபலிப்பதாகவே உள்ளது. அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாத நிலையிலே அரசியலமைப்பிலிருந்து அதை அகற்றுவது

அல்லது நீர்த்துப்போகச்செய்வதென்ற முடிவு, அப்பட்டமான ஜனநாயக விரோத பேரினவாத ஒடுக்குமுறையின் சர்வாதிகார முயற்சியாகும்.

நாட்டில் யுத்தம் மும்முரமாக இடம்பெற்றுவந்த இறுதி மாதங்களில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நாட்டு மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதி, யுத்தத்திற்குக் காரணமான தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்போம் என்பதேயாகும். ஆனாற் படிப்படியாக அது பற்றிய கதைகள் யுத்த வெற்றி விழாக்களுடன் மறைந்து கொண்டன. கடந்த ஒரு வருடத்தில் பதின்மூன்றாவது திருத்தத்தை இல்லாமற் செய்ய அல்லது திருத்தி நீர்த்துப் போகச் செய்ய அரசாங்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றுக்கு எதிராக ஐ.தே. கட்சி, ஜே.வி.பி., த.தே.கூ. ஆகிய பாராளுமன்ற எதிர்க்கட்சிகள் தத்தமது நிலையில் எதிர்ப்புக் குரலை முன்வைத்து வருகின்றன. அதேவேளை, அரசாங்கத்திற்குள் இருக்கும் பாராளுமன்ற இடதுசாரிக் கட்சிகள் என்பன தமது கடும் எதிர்ப்பை வெளிக்காட்டியும் வருகின்றன. இவர்களுடன் சிறிலங்கா முஸ்லீம் காங்கிரசும் எதிர்ப்பைக் காட்டி வருகின்றது. ஈ.பி.டி.பியும் மலையகத்தின் இ.தொ.கா.வும் ஏனையவர் களும் தெளிவான எதிர்ப்பு நிலைப்பாட்டை எடுக்க முடியாது விக்கிய நிலையில் இருந்து வருகின்றனர். இந்நிலையில் அரசாங்க அமைச்சர் களான சம்பிக்க ரணவக்கவும், விமல் வீரவன்சவும் பதின்மூன்றாவது திருத்தத்திற்கு உச்சநிலை எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர். இவர்களது வரிசையில் அரசாங்கத்தின் செல்லப்பிள்ளைகளான பொது பல சேன, சிங்கள ராவய, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் போன்றன களமிறங்கி நிற்கின்றன. பௌத்த மத அடிப்படைவாதத்தையும் சிங்கள இனத் தொன்மைத்துவத்தையும் நவ.ஃபாசிசப் போக்கில் உயர்த்தி நிற்கின்றனர். தமிழ், முஸ்லீம், மலையக மக்களுக்கு எதிரான இவர்களது வெறித்தனமான துவேஷங்களும் எதிர்ப்புகளும் செயற்பாடுகளும் திட்ட மிட்டவாறு முன்னெடுக்கப்படுகின்றன. இவர்களுக்குப் பின்னால் ராஜபக்ச சகோதரர்களது பேரினவாத பாசிச ஒடுக்குமுறைக் கரங்கள் இருந்து வருவது தெரிகிறது. அத்துடன் அந்நிய ஏகாதிபத்திய சக்திகளும் இவற்றின் பின்னால் மறைவில் இருந்துவருவதாக நம்பப்படுகிறது.

மற்றொருபுறத்தில், நாட்டை ராணுவமயப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. வடக்கு கிழக்கில் ஒரு லட்சத்திற்கு மேற்பட்ட ராணுவமும் ஏனைய ஆயுதப் படைகளும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன் ராணுவம் சகலவழிகளிலும் நவீன மயப்படுத்தி பலப்படுத்தப் பட்டு வருகின்றது. பல்கலைக்கழகம் புகும் மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் ராணுவத் தலைமையகங்களில் வழங்கப்

படுகின்றன. பாடசாலை அதிபர்களுக்குப் பயிற்சியும் ராணுவப் பட்டங்களும் கொடுக்கப்படுகின்றன. இவை மட்டுமன்றி, அரசாங்க உயர் பதவிகளில் ஓய்வுபெற்ற ஆயுதப் படைகளின் அதிகாரிகளே இருந்து வருவதுடன் வெளிநாட்டு ராஜதந்திர சேவைகளிலும் அவர்கள் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். குறிப்பாக வடக்குக் கிழக்கு மாகாணங்களின் ஆளுநர்கள், சில அரசாங்க அதிபர்கள் என்போர் முன்னாள் ஆயுதப்படைகளின் அதிகாரிகளேயாவர். வருடாவருடம் ஆயுதப் படைகளுக்கு ஒதுக்கப்படும் வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீடானது யுத்தம் முடிந்து நான்கு ஆண்டுகளின் பின்பும் அதிக தொகையாக முதலிடத்திலே இருந்து வருகிறது. குறிப்பாக வடக்குக் கிழக்கில் பாரிய ராணுவ முகாம்கள் நிரந்தரமாக்கப்பட்டு விமான, கடற்படைத் தளங்கள் நவீனப்படுத்தப்பட்டு விஸ்தரிக்கப்படுகின்றன.

இவற்றுக்கும் மேலாக, இன்றைய ராஜபக்ச சகோதரர் குடும்ப ஆட்சி யானது ஜனநாயக மறுப்பிற்கும் மனித உரிமை மீறல்களுக்கும் சர்வதேச அரங்கிலும் உள்நாட்டிலும் பெயர்பெற்று விளங்கும் ஒரு ஆட்சி யாகக் காணப்படுகிறது. கொலைகள், ஆட்கடத்தல்கள், காணாமல் போதல்கள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. இவற்றை ஆயுதப் படைகளும் அரசாங்க ஆதரவு பெற்ற ஆயுதக் குழுக்களும் செய்து வருகின்றன. இவற்றை மூடிமறைத்து வருவதிலேயே அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருந்து வருகிறது.

ஊழல், லஞ்சம், மோசடி இன்றைய ஆட்சியில் கொடி கட்டிப் பறக்கின்றன. எங்கும் எதிலும் தரகுப் பணம் முதன்மை பெற்று நிற்கின்றன. அரசாங்க அதி உயர் மட்டத்தினர் அமைச்சர்கள் உயர் அதிகாரிகள் ஊழல்களில் மிதந்து வருகின்றனர். பொது நிறுவனங்கள் பற்றிய பாராளுமன்றத் தெரிவுக் குழுவான கோப் (COPE) வெளியிடும் அறிக்கைகள் அரசாங்க மட்ட பொது நிறுவனங்களின் இடம்பெற்றுள்ள ஊழல்களை அம்பலப்படுத்துகின்றன. லஞ்சம் இன்று பகிரங்கமாய் உள்ளதுடன் அதுவின்றி எதுவும் செய்யவியலாது என்ற நிலையே காணப்படுகிறது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம், மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்திருப்பதற்காகப் பல கட்சிகளையும் தன்னுடன் வைத்திருக்கிறது. வலதுசாரி, இடதுசாரி, மதவாத, பேரினவாத சக்திகளின் கூட்டுக் கலவையாகவே அரசாங்கம் காணப்படுகிறது. அதனால் அமைச்சரவை அந்தஸ்துக் கொண்ட அறுபத்தைந்து அமைச்சர்களும் நாற்பது

வரையான பிரதி அமைச்சர்களும் இருந்து வருகின்றனர். அத்துடன் பெருந்தொகையான ஜனாதிபதி ஆலோசகர்கள் இருந்து வருவதுடன், இவர்கள் எல்லோரும் நாட்டு மக்களின் பணத்தில் பெருந்தொகையான சம்பளமும் சலுகைகளும் சொகுசு வாகனங்களும் பெற்று ஆடம்பரமாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சிங்கள, தமிழ், முஸ்லீம், மலையக அமைச்சர்கள் முதல் உயர் அரசாங்க அதிகாரிகள் வரை காணப் படுகின்றனர். இதில் மற்றொரு முரண்நகை யாதெனில் முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அதியுயர் மட்டங்களில் இருந்து சரணடைந்தவர்கள் எனப்படும் சிலர் அமைச்சுப் பதவிகளும் ஏனைய பதவிகளும் பெற்றுச் சகல பாதுகாப்புகளுடனும் அரசாங்க விருந்தினர் களாக இருந்து சகல சலுகைகளும் சுகபோகங்களும் அனுபவித்து வருவதுதான். கொள்கை கோட்பாடு இலட்சியம் இன்றியும் மக்களுக்கான விடுதலை பற்றிய தெளிவும் அர்ப்பணிப்பு இல்லாத எந்தவொரு வீரதீர இயக்கமும் அதன் தலைமையும் சென்றடையும் இடத்தையே மேற்படி நபர்கள் உதாரணப்படுத்தியுள்ளனர்.

இவ்வாறான மகிந்த சிந்தனை அரசாங்கம் இந் நாட்டின் தொழிலாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், அரசாங்க-தனியார் துறை ஊழியர்கள், பெண்கள், இளைஞர்கள் ஆகிய உழைக்கும் மக்களுக்கு ஆதரவாகவோ அவர்களுக்கு நன்மைகள் செய்துவரும் ஒரு அரசாங்க மாகவோ இல்லை என்பது அப்பட்டமாக இருந்து வரும் உண்மையாகும். நிறைவேற்று அதிகாரத்தின் உச்சநிலை தனிநபர் சர்வாதிகாரத்தை நடைமுறைப்படுத்தி வரும் ராஜபக்ச சகோதரர்களின் ஆட்சியானது பாசிசத்தின் வழிமுறைகளினூடே வழி நடந்து செல்கிறது. இன்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. பல வருடங்களாகியும் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப் படவில்லை. காணாமற் போனோர் பற்றிய கதையே எடுக்கப்படவில்லை. ஊடகங் களுக்கு ஒழுக்கக் கோவை என்ற பெயரில் ஊடக சுதந்திரம் கடுமை யாக நசுக்கப்படுகிறது. ஊடகவியலாளர்கள் மீதான கொலைகள், ஆட் கடத்தல்கள், தாக்குதல்கள், காணாமற்போதல்கள் தொடர்கின்றன. இக் காரணங்களால் பலர் நாட்டைவிட்டு வெளியேறி அகதிகளாக வெளி நாடுகளில் தஞ்சமடைந்துள்ளனர். இன்று ஊடகங்கள் சுய தணிக்கை யைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய அடக்கு முறைகளின் கீழேயே வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் தொழிலாளர்கள் ஊழியர்களின் சம்பள உயர்வுக் கோரிக்கைகள் மறுத்து நிராகரிக்கப்படுகின்றன. சகல துறைகளிலும் சம்பளம் போதாமையாலும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க

முடியாமலும் அதிருப்திகளும் எதிர்ப்பு நடவடிக்கைகளும் மேற்கிளம்பி வருவதைக் காணமுடிகிறது. அதற்கு அரசாங்கம் கொடுக்கும் பதில் அடக்குமுறையாக மட்டுமே இருந்துவருகிறது. பாராளுமன்ற இடது சாரிகள் எனப்பட்டவர்களும் இணைந்து நிற்கும் இன்றைய அரசாங்கம் மிக மோசமான தொழிலாளர் விரோத அரசாங்கமாகச் செயற்பட்டு வருகின்ற போக்கையே காணமுடிகிறது. இவர்கள் மட்டுமன்றி விவசாயி கள், மீனவர்கள், பெருந்தோட்டத் தொழிலாளர்கள் உள்ளிட்ட உழைக்கும் மக்கள் அனைவரும் அத்தியாவசிய உணவுப் பொருட்க ளினதும் அன்றாடப் பாவனைப் பொருட்களினதும் விலை உயர்வு களாலும் கட்டண அதிகரிப்புகளாலும் மிக மோசமான வாழ்க்கை நிலைமைகள் ஊடாக வாழ்க்கைத்தர வீழ்ச்சிகளைக் கண்டு வருகிறார் கள். அவ்வாறே பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் முதல் பாடசாலை மாணவர்கள் வரை மோசமான கல்வித்துறைக் கொள்கைகளால் பாதிக்கப்பட்டவர்களாகி நிற்பதையும் காணமுடிகிறது. அவற்றை எதிர்த்து நீதி நியாயம் கேட்டால் மாணவர்கள் மீது மோசமான பொலிஸ் ராணுவ அடக்குமுறை ஏவிவிடப்படுவது சாதாரண விடயமாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, ராஜபக்ச சகோதரர்களின் குடும்ப ஆட்சியானது இந்நாட்டின் ஏகப்பெரும்பான்மையான மக்கள்மீது தாங்கமுடியாத சுமைகளை ஏற்றி வரும் ஒரு தரகு முதலாளித்துவ அடக்குமுறை ஆட்சியாகவே தொடர் கிறது. தமது சுயரூபத்தை மறைக்கவும் பெரும்பான்மைச் சிங்கள மக்களைத் திசைதிருப்பி அவர்களிடையே வாக்கு வங்கிச்செல்வாக்குப் பெறுவதற்கும், தாமே பௌத்த மதத்தின் காவலர்கள் போன்று இன்றைய ஆட்சியினர் நடந்து கொள்கின்றனர். இது இவர்கள் வாக்கு வங்கிக்கான வழியாக மட்டுமன்றி இந்நாட்டைத் தனியே சிங்கள பௌத்த நாடாக்கும் பேரினவாத சிந்தனையின் பாற்பட்டதுமாகும்.

இத்தகைய அடிப்படையிலேயே, நாட்டின் தேசிய இனப் பிரச்சினை நோக்கப்படுகிறது. இலங்கையின் ஆட்சி அதிகாரத்திற்கு வர எத்தனிக் கும் எந்தவொரு பாராளுன்றக் கட்சியும் சிங்கள பௌத்த பேரினவாத நிலைப்பாட்டை எடுக்காமல் தமக்கான வாக்குவங்கி எதனையும் கொண்டிருக்க முடியாது என்ற எழுதா விதி இருந்து வருகிறது. இது தென்னிலங்கையின் அனைத்து சிங்கள பௌத்த அரசியல் கட்சிக ளிடையேயும் படிந்து இறுகிப்போன அரசியல் நிலைப்பாடாகும். ஜே.வி.பி. இதற்கு விதிவிலக்கல்ல. அதேவேளை ஜே.வி.பி.யில் இருந்து பிரிந்த சோஷலிச முன்னிலைக் கட்சியும் இந்த விதிவிலக்கிலிருந்து விடுபட முடியாது தடுமாறி நிற்கிறது. இவர்கள் எல்லோருமே சுயநிர்ணய உரிமை என்பதனைப் பிரிவினையாகவே அர்த்தப்படுத்திய நிலையில்

தேசிய இனப்பிரச்சினைக்கு உரிய தீர்வை முன்வைக்காது வெவ்வேறு நியாயங்கள் கூறி, அதன் ஆழத்தைப் புரியாது, சொற்சிலம்பம் ஆடி வருகின்றார். ஒரு நேர்மையான இடதுசாரிக் கட்சியோ தனிநபரோ நாட்டின் பிரதான பிரச்சினையான தேசிய இனப் பிரச்சினையில் முன்வைக்கும் கொள்கையே அவர்களது இடதுசாரித் தனத்திற்குரிய அளவுகோலாகிறது.

இந்நிலை காரணமாகவே கடந்த அறுபத்தைந்து வருடகால பாராளுமன்ற—நிறைவேற்றதிகார ஆட்சி முறைகளின் கீழ் தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்படவில்லை. அதனால் தேசிய இனப பிரச்சினையானது யுத்தமாக்கப்பட்டு சுமார் மூன்றரை லட்சம் வடக்கு கிழக்கு மக்களின் உயிர்கள் பலி கொள்ளப்பட்டன. இதில் சிங்கள முஸ்லிம், மலையக மக்களும் கொல்லப்பட்டனர். இன்றும் கூட ராஜபக்ச குடும்ப ஆட்சியானது தேசிய இனப்பிரச்சினை என்பதனை உச்சரிப்ப தற்குக் கூடத் தயாரில்லாத நிலையிலேயே இருந்து வருகிறது. அதன் ஆழத்தையும் அபாயத்தையும் புரிந்துகொள்ள மறுத்து யுத்த வெற்றி தந்த மமதையால் பேரினவாத ராணுவ ஒடுக்குமுறை மீது நம்பிக்கை வைத்துச் செயற்பட்டு வருகிறது. நாட்டின் இறைமைக்கும் சுதந்திரத்திற் கும் சுயாதிபத்தியத்திற்கும் ஆபத்தைக் கொண்டுவரக் கூடிய நிலையில் இருந்துவரும் தேசிய இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வு காணப்படுவதை மகிந்த சிந்தனை ஆட்சி எனப்படும் ராஜபக்ச சகோதரர் ஆட்சியானது மறுத்து வருவது அபாயமான ஒரு நிலையேயாகும். இதனைத் தடுத்துநிறுத்தக் கூடிய அரசியல் தீர்வுக்கான கொள்கையும் கோரிக்கையும் முன்னெடுக்கப்பட வேண்டும். ஐக்கியப்பட்ட இலங்கையில் சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சுயாட்சி அமைப்பு முறையே தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வாக முடியும் என்பதை எமது கட்சி தெளிவான கொள்கையாகவும் கோரிக்கையாகவும் முன் வைத்து வருகின்றமை குறிப்பிட வேண்டியதாகும். அதேவேளை, ஒடுக்கப்படும் தேசிய இனங்கள் மத்தியிலான பிற்போக்குத் தலைமைகள் பேரினவாத ஒடுக்குமுறை ஆட்சிக்கே ஆதரவு தெரிவித்து வருகின்றன. தமிழ்த் தேசியம் பேசும் தமிழர் தரப்பு ஆதிக்க அரசியல் தலைமைகள், பேரினவாத எதிர்ப்பு என்ற போர்வையில் தமது பழமைவாதக் குறுந் தேசியவாதத்தைப் பற்றி நிற்கின்றன இத்தகைய நிலைப்பாடு கடந்த காலம் முதல் இன்றுவரை முன்னெடுத்து வரப்படுகிறது. இதனை வரலாறு நிருபித்து வந்துள்ளது. ஆனால் தமிழ்த் தலைமைகள் தமது மேட்டுக்குடி உயர்வர்க்க நிலைப்பாட்டடை முன்னெடுப்பதில் இன்றும் முன்னின்று வருகின்றன.

அதேவேளை வடக்குக் கிழக்கைத் தொடர்ந்தும் ராணுவப் பிடிக்குள் வைத்துவருவதன் மூலம் தமது பேரினவாத ஒடுக்குமுறைத் திட்டங்களை ராஜபக்ச ஆட்சியினர் நிறைவேற்றி வருகின்றனர். ராணுவத்தை அங்கு சகல மாவட்டங்களிலும் நிரந்தரமாக வைத்திருப்பதற்கான திட்டத்தின் படியே மக்களுக்குச் சொந்தமான நிலங்களைப் பலவந்தமாகப் பிடித்து வருகின்றனர். பல அளவுகளில் பிரதேசங்களுக்கு ஏற்றவாறு மக்களின் நிலங்கள் வீடுகள் தொழில் செய்யும் இடங்கள் விவசாய நிலங்கள், கடலோரங்கள் ஆகியன பறித்து வரும் போக்கு அதிகரித்து வருகிறது. வட மாகாணத்தில், வலி வடக்கில், பலாலி, மயிலிட்டி, காங்கேசன் துறை, வீமன்காமம், குரும்பசிட்டி, வசாவிளான் போன்ற பகுதிகளில் 24 கிராமசேவகர்கள் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் இன்னமும் மீள்குடியேற அனுமதிக்கப்படவில்லை. 1983ல் இருந்து படிப்படியாக வலி வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்டுவந்த மக்கள் 1990ல் முற்றாக வெளியேற்றப் பட்டு அகதிவாழ்விற்குள் தள்ளப்பட்டனர். இப் பிரதேசத்தின் 7 கிராம சேவகர் பிரிவுகளைச் சேர்ந்த சுமார் 6400 ஏக்கர் நிலங்களைச் சுவீகரிக்க அரசாங்கம் உத்தியோகபூர்வ அறிவித்தலை விடுத்துள்ளது. இதனை இடம்பெயர்ந்த மக்களும் அரசியல் கட்சிகளும் பொது அமைப்புகளும் தொடர்ந்து எதிர்த்து வருகின்றனர். அதேநேரம், சிங்கள பௌத்த பேரினவாத ஆதிக்கத்தின் சின்னமாக வடக்குக் கிழக்கில் பௌத்த விகாரைகளையும் புத்தர் சிலைகளையும் நிறுவிப் பலப்படுத்தி வருகின்றனர். அத்துடன் இன்றும் வடக்கில் ராணுவ நிர்வாகமே சகலவற்றையும் தீர்மானிக்கும் நிலையில் இருந்துவருகிறது. கிழக்கில் முன்னாள் ஆயுதப்படை அதிகாரியான ஆளுனரே சகலவற்றையும் தீர்மானிக்கும் அதிகாரியாக இருந்துவருகிறார். வடக்குக் கிழக்கு, தமிழ் முஸ்லீம் மக்களின் பாரம்பரிய பிரதேசங்கள் என்பதை மறுதலித்து மூவின மக்களது பிரதேசம் எனக் கூறிப், பேரினவாதத் திட்டங்களே முன்னெடுக்கப்படுகின்றன. கிழக்கின் சம்பூர் கிராமம் அரசால் பறிக்கப் பட்டு 540 ஏக்கர் இந்திய அனல் மின் உற்பத்தி நிலையத்திற்கும் 818 ஏக்கர் பாரிய கைத்தொழில் வலயத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. சம்பூர் மக்கள் தொடர்ந்தும் அகதிகளாகவே வாழ்ந்து வருகின்றனர். அதே வேளை சம்பூரில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்திற்கான உள்ளார்ந்த திட்டங்கள் தீட்டப்படுகின்றன.

தமிழ் மக்கள் போன்று முஸ்லீம் மக்களும் பேரினவாதத்தால் ஒடுக்கப்படுகின்றனர். ஆனால் அதன் தலைவர்கள் என்போரது சலுகை பெறும் அரசியல் நிலைப்பாட்டால் அவ் ஒடுக்குமுறைகள் மறைக்கப் படுகின்றன. அவற்றையும் மீறிய நிலையில் எதிர்ப்புகள் வெளி வரு

கின்றன. பொதுபல சேன என்ற மத அடிப்படைவாத அமைப்பு அரசின் பின்புலத்தோடு முஸ்லீம் மக்களுக்கு எதிரான பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. இதுவரை 25 வரையான பள்ளிவாசல்கள்மீது தாக்குதல்களும் இழி செயல்களும் செய்யப்பட்டுள்ளன. அவற்றுக்கு எதிராக அரசாங்கம் எதுவுமே செய்யாது மௌனமாக இருந்துவருகிறது. அதேவேளை, முஸ்லீம் அரசியல் தலைமைகள் அவற்றைக் கண்டும் காணாதது போன்று இருந்து வருகின்றன. ஆனால் முஸ்லீம் மக்கள் மத்தியில் இன்றைய பேரினவாத ஆட்சிக்கு எதிரான அதிருப்திகளும் கண்டனங்களும் எதிர்ப்புகளும் ஆங்காங்கே அதிகரித்து வருகின்றன.

அதேபோன்று, மலையகத் தமிழ் மக்கள், வர்க்க இன அடிப்படைகளில் தொடர்ந்தும் ஒடுக்கப்பட்டு வருகிறார்கள் என்பது நாளாந்தம் நிதர்சனமாகி வருகின்றது. அண்மையில் தீர்மானிக்கப்பட்ட கூட்டு ஒப்பந்த சம்பள உயர்வு என்பது திட்டமிட்டவாறு குறைப்புக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது. வாராந்த வேலைநாட் குறைப்பின் மூலம் அவர்களது சம்பளம் மேலும் குறைக்கப்படுகிறது. அதனால் பலர் வேலை தேடி வெளியிடங்களுக்கு அலைந்து அங்கெல்லாம் குறைவான சம்பளத்துடன் அவ்வப்போதான வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் தற்போது அரசாங்கம் மேற்கொள்ள முற்பட்டுள்ள 37,000 ஏக்கர் தரிசு நிலக் காணிப் பகிர்வில் தோட்டத் தொழிலாளர்களும் இளைஞர்களும் புறந்தள்ளப்படும் நிலையே காணப்படுகிறது. இவற்றுக்கு எதிரான கண்டனக் குரல்கள் எழுந்து வருகின்றன. அதேவேளை, ஏற்கனவே மலையக மக்களுக்கு மறுக்கப்பட்டுவரும் அடிப்படை வாழ்வாதார உரிமைகள் யாவும் தொடர்ந்தும் அதே நிலையிலேயே இருந்து வருகின்றன. மலையகத் தலைவர்கள் என்போர் பாராளுமன்ற அரசியலிலும் தொழிற்சங்க ஏமாற்றுகளிலும் அரசாங்கத்துடன் இணைந்து அமைச்சர் பதவிகள் பெற்று நிற்பதன் ஊடாகத் தமக்கும் தம்மவர்களுக்கும் சலுகைகள் பதவிகள் பெற்றுக்கொள்ளும் போக்கு முன்நிலை வகித்துவருவதைக் காணமுடிகிறது. எனவே மலையக மக்கள் வர்க்க சுரண்டலுக்கும் இன ஒடுக்குமுறைக்கும் முகம் கொடுத்து வரும் போக்கிலும் அவர்களது பொருளாதார வாழ்வுரிமைக் கோரிக்கை களும் தேசிய இன உரிமைகளும் மேலும் வற்புறுத்தப்பட வேண்டிய புதிய சூழல் உருவாகி வருகிறது.

தரகு முதலாளித்துவத்தை மையப்படுத்திய பேரினவாத ராணுவ ஒடுக்குமுறையும் ஊழல் மிக்கதுமான இன்றைய ஆட்சியானது வர்க்க இன அடிப்படைகளில் ஏகப் பெரும்பான்மையான சிங்கள தமிழ் முஸ்லீம் மலையக உழைக்கும் மக்களை ஒடுக்கிநிற்கும் ஒரு பாசிச

ஆட்சியாகவே தொடருகின்றது. தமது ஆட்சியைத் தொடர்வதற்கு அமெரிக்க மேற்குலக ஏகாதிபத்திய, இந்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளோடும் சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, ஈரான் போன்ற நாடுகளோடும் வெவ்வேறு முகங்களைக் காட்டியவாறு நேரடியாகவும் மறைமுகமாகவும் இணைந்து செயற்பட்டு வருகிறது.

தோழர்களே!
இத்தகைய அரசியல் நிலைப்பாட்டின் ஊடாகவே இன்றைய ராஜபக்ச சகோதரர்களின் குடும்ப ஆட்சியானது நாட்டின் பொருளாதாரத்தை நவகொலனியத்தின் தரகு முதலாளித்துவத்தால் தலைமை தாங்கப்படும் நவதாராள பொருளாதாரமாக ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலின் ஊடே முன்னெடுத்து வருகின்றது. இது 1977ல் பதவிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் தலைவர் ஜே.ஆர். ஜயவர்த்தனவும் தொடக்கி வைத்த பொருளாதாரக் கொள்கையின் தொடர்ச்சியேயாகும். இன்றுவரையான அப்பொருளாதாரக் கொள்கையின் நீட்சியானது தாராள மயம், தனியார்மயம், உலகமயமாதல் என்பனவற்றின் ஊடாக முன்னெடுக்கப்பட்டுவருகின்ற போக்கில் மாற்றம் எதுவும் ஏற்படுத்தப் படவில்லை. இதனால் உற்பத்திப் பொருளாதாரம் என்பது அழிக்கப்பட்டு நவதாராள நுகர்வுப் பொருளாதாரம் வலுவாக்கப்பட்ட நிலையே காணப் படுகிறது. நாட்டு மக்களின் தேவைக்கான உணவு வகைகளின் உற்பத்திகள் கைவிடப்பட்டு அரிசி முதல் அத்தியாவசிய உணவுப் பொருள்கள், உப உணவுப் பொருட்கள் யாவும் இறக்குமதியாகும் சீரழிந்த நிலையே காணப்படுகிறது. இதனால் உள்ளூர் உற்பத்தியில் ஈடுபட்டு வந்த விவசாயிகள் ஒட்டாண்டி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அரிசி முதல் உப உணவு வகைகள் வரை உற்பத்தி செய்யப்பட்டு தன்னிறைவு நோக்கி நகர ஆரம்பித்த நமது நாட்டு விவசாயம் இன்று தாராள இறக்குமதிகளால் நாசமடைந்து காணப்படுகிறது. அதேவேளை இறக்குமதியாக்கப்படும் உணவுப் பொருட்களின் விலைகள் மக்கள் வாங்கமுடியாத அளவுக்கு அதிகரித்துக் காணப்படுகின்றன. இலங்கை ஒரு விவசாய நாடு என்ற பெயர் பெற்று விளங்கிய காலம் மறைந்து அந்நிய இறக்குமதிகளின் சந்தையாக்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக இலங்கையைச் சிங்கப்பூராக்குவேன் என்ற ஜே.ஆரின் கனவை ராஜபக்ச சகோதரர்களின் குடும்ப ஆட்சியானது வேகமாக நனவாக்கி வருகிறது.

இத்தகைய நவதாராள இறக்குமதி நுகர்வுப் பொருளாதாரத்தை வலுப்படுத்தவே உட்கட்டமைப்புசார் அபிவிருத்தி என்பது முன்னெடுக்கப் படுகிறது. இவ் அபிவிருத்தியில், வீதிகள், அதிவேக வீதிகள், புதிய துறைமுகம், துறைமுக விஸ்தரிப்புக்கள், விமான நிலையங்கள், நகர

கட்டிடப் புனரமைப்புகள், நகர அழகுபடுத்தல்கள், நவீன கட்டிட வசதிகள், உயர் உல்லாசவிடுதிகள் போன்றவற்றில் மட்டுமே கவனம் செலுத்தப்படுகிறது. இவ் உட்கட்டமைப்புசார் அபிவிருத்தி என்பது இன்றைய நவதாராள ஏகாதிபத்திய உலகமயமாதல் பொருளாதாரக் கொள்கையின் விரிவாக்கத்திற்கானதேயாகும். நூறு வருடங்களுக்கு முன்பு கொலனியவாதிகள் தமது சுரண்டல் தேவைகளுக்கான உட் கட்டமைப்பு வசதிகள் ஒவ்வொன்றையும் செய்தனர். இப்போது நவகொலனியவாதிகளின் சுரண்டல் தேவைகளுக்காக நம் நாட்டின் ஆட்சியாளர்களினால் உட்கட்டமைப்புசார் அபிவிருத்தி செய்யப்படுகிறது. இவை மக்களுக்கு சார்பானவை அல்ல. முற்றிலும் தனியார்மயம் தாராளமயம் உலகமயமாதல் நிகழ்ச்சி நிரலுக்கானவைகளேயாகும். தங்குதடையற்ற இறக்குமதிகளும் அவற்றை விரைவாக நாட்டின் நாலா திசைகளுக்கும் எடுத்துச்செல்லவும் உல்லாசப் பிரயாணிகளின் வருகைக் கும் உல்லாச அனுபவிப்புகள் என்பனவற்றுக்காகவுமே இவ் அபிவிருத்தி எனப்படுவது பலநூறு கோடி ரூபாய்களை உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய அபிவிருத்தி வங்கி, சீன, இந்திய வங்கிகள் மூலம் கடன்பெற்று செய்யப்படுகின்றன. இதன் காரணமாகவே வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நகரங்களிலும் கிராமப்புறங்களிலும் நிலங்களும் ஏனைய வளங்களும் வழங்கப்பட்டு வருகின்றன. இவற்றில் ஐந்து ஏழு நட்சத்திரக் ஹோட்டல்கள் மட்டுமன்றி கஸினோ சூதாட்ட மையங்களும் தலைநகரில் கட்டப்பட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளன. இவை உல்லாசப் பிரயாணிகளின் வருகைக்கானவையேயாகும். குறுக்கு வழிகள் மூலம் பணவருவாயை நாடியே ராஜபக்சக்களின் அரசாங்கம் செயல்பட்டு வருகிறது.

அதேபோன்று, வர்த்தக மையங்களுக்குரிய பாரிய கட்டிடங்களுக்கான முதலீடுகள் வந்து கொண்டிருக்கின்றன. தலைநகரில் உள்ள சாதாரண மக்களின் குடியிருப்புகள் அகற்றப்பட்டு அவ்விடங்கள் பெருவணிக நிறுவனங்களுக்குத் தாரைவார்க்கப்படுகின்றன. இவ்வாறான நிலங்களும் வளங்களும் அந்நியருக்குத் தாரைவார்க்கப்படும்போது ஆட்சியின் அதி உயர் மட்டத்திலிருந்து அடுத்தடுத்த மட்டங்களில் இருப்போர் வரை தாராளமயமாகவே தரகுப் பணம், சந்தோசப் பணம் பெற்றுக்கொள்கின்ற நடைமுறை மறைவாகப் பின்பற்றப்படுகிறது. இவ்விடத்தில் ஊழல்கள் பல்வேறு விதங்களிலும் இடம்பெறுகின்றன. இவ் ஊழல் லஞ்சம் மோசடிகள் மேலிருந்து கீழ் நோக்கி வருகின்றன. “அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி” என்பது இன்று நடைமுறையாகி வருகின்றது.

எவ்வழியிலும் பணம் திரட்டிக் கொண்டால் போதும் என்ற முதலாளித்துவப் பேராசை நடைமுறை மேலோங்கி நிற்கிறது.

நாட்டின் ஏற்றுமதிப் பொருளாதாரத்தில் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிற்கான தைத்த ஆடைகளின் ஏற்றுமதியே முதன்மை பெற்றுள்ளது. இத் தொழில் சுதந்திர வர்த்தக வலயங்களிலும் அதற்கு வெளியிலும் வெளிநாட்டு உள்நாட்டு முதலீட்டாளர்களாலேயே முன்னெடுக்கப்படுகிறது. மொத்தம் சுமார் 3½ லட்சம் தொழிலாளர் ஊழியர்கள் தைத்த ஆடை உற்பத்தித் துறையில் வேலை செய்கின்றனர். இவர்களில் 50 ஆயிரம் பேர் சுதந்திர வர்த்தக வலயத்தில் தொழில் புரிகின்றனர். இவர்களிற் பெரும் பகுதியினர் இளம் பெண்களாக உள்ளனர். 2010ன் நடுப் பகுதியில் 200 ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டன. அதனால் 20,000 (இருபதாயிரம்) பேர் வேலை இழந்தனர். தைத்த ஆடைகள் உற்பத்தியில் 59 சதவீதம் ஐரோப்பிய யூனியன் நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. முதலிடத்தில் இருந்து வந்த தேயிலை ஏற்றுமதி இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது. அதேவேளை, தேயிலைத் தோட்டக் கம்பனிகள், நட்டத்தில் இயங்குவதாகக் கணக்குக் காட்டி வருகின்றன. தோட்டத் தொழில் துறையில் ஐந்து லட்சம் தொழிலாளர்கள் வேலை செய்கின்றனர். அவர்களில் அரைவாசிப் பேர் பெண்களாவர். அவர்கள் தொடர்ந்தும் கடுமையான நிலையில் வேலைசெய்து வருகின்றனர். போசாக்கின்மை, தாய்-சேய் நலமின்மை, இறப்பு என்பன மோசமானதாக இருந்து வருகின்றன. இச் சூழலில் மலையகத் தேயிலை ரப்பர் தோட்டத் தொழிலாளர்களுக்கு கிடைக்கக்கூடிய சம்பளம் குறைவாகவே இருந்துவருகிறது. இதில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களே ஆகக் குறைந்த நாட் சம்பளம் பெறுவோராக உள்ளனர். அதேவேளை, மத்திய கிழக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் சென்றுள்ள நம் நாட்டுத் தொழிலாளர்கள் கடுமையான சூழல்கள் மத்தியில் குறைந்த (ஒப்பீட்டு வகையில் நம்நாட்டுச் சம்பளத்தை விடச் சற்று அதிகமான) சம்பளத்தில் வேலைசெய்து வருகின்றனர். மேலே குறிப்பிட்ட மூன்று துறைகளிலும் ஆண்களை விடப் பெண்களே அதிகளவான எண்ணிக்கையில் உழைப்போராகக் காணப்படுகின்றனர். அதே போன்று விவசாயத் துறையிலும் அரசாங்க தனியார் துறைகளிலும் பெண்கள் கணிசமான தொகைகளில் தொழில்புரிந்து வருகின்றனர். அவ்வாறிருந்தும் பெண்கள் வர்க்கரீதியிலும் பால் நிலை அடிப்படையிலும் மட்டுமன்றி இன, சாதிய நிலைகளிலும் பல்வேறு பிரச்சினைகளையும் ஒடுக்குமுறைகளையும் எதிர் கொண்டவாறே காணப்படுகின்றனர்.

நாட்டின் தொழிலாளர்களும் விவசாயிகளும் மீனவர்களும் நமது நாட்டின் உணவுத் தேவையின் உற்பத்தி சக்திகளாக இருந்தபோதிலும் அவர்கள் புறக்கணிக்கப்படும் நிலையிலே இருந்து வருகின்றனர். ஒரு தேசிய பொருளாதாரத்திற்கான அடிப்படைகளும் திட்டமிடலும் கைவிடப் பட்ட காரணத்தால் விவசாயம், மீன்பிடி, சிறுதொழில்கள் ஆகிய துறைகள் நலிவடைந்து செல்வதையே காணமுடிகிறது. ஏனைய துறைகளைப் பொறுத்தவரையிலும் ஒரு தேசிய பொருளாதாரத்திற்கான இலக்கை நோக்கி நாடும் மக்களும் வழிநடாத்தப்படவில்லை என்பது தெளிவானதாகும்.

நாட்டின் சனத்தொகை இரண்டே கால் கோடி எனச் சனத்தொகைப் புள்ளி விபரம் தெரிவிக்கிறது. இத் தொகையில், 52 சதவீதமானவர்கள் பெண்களாக உள்ளனர். அரசாங்கத் துறையில் சுமார் பதின்மூன்று லட்சம் பேர் பணிபுரிகின்றனர். தனியார் துறையில் (5 லட்சம் பெருந் தோட்டத் தொழிலாளர்களையும் உள்ளடக்கி) அறுபத்தைந்து லட்சம் பேர் தொழில் செய்கின்றனர். நாட்டில் இருபத்தைந்து லட்சம் விவசாயிகள் இருப்பதாகப் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால் மொத்த தேசிய உற்பத்தியில் 12-13 சதவீதத்தினை மட்டுமே விவசாய உற்பத்தி கொண்டுள்ளது. அதேபோன்று, நாட்டின் சனத்தொகையில் இருபத்தைந்து சதவீதத்தினர் இளைஞர் யுவதிகளாகக் காணப்படு கின்றனர். இவ் இளைஞர்களில் வேலை இன்மையை எதிர்நோக்குவோர் கணிசமானவர்களாக உள்ளனர். வருடாவருடம் பல்கலைக்கழங்களில் இருந்தும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களிலிருந்தும் வெளிவரும் படித்த இளம் தலைமுறையினர் உரிய வேலை வாய்ப்பு இன்றியே இருந்து வருகின்றனர். அதேவேளை, நவீன தொழில்நுட்பத் துறை தகவல் தொழில்நுட்பத் துறை ஆகியவற்றில் பணிபுரிவோர் வெள்ளை உடைதரித்த, சுரண்டப்படும் ஊழியர்களாகவே இருந்து வருகின்றனர். அவர்களை அறியாமலே அவர்கள் நவீன வழிகளில் சுரண்டப்பட்டு வருவதானது அதிகரித்தச் செல்கிறது. ஆனால், அத்தகையோர் அதனை ஏற்றுக்கொள்வதில்லை. இவை யாவும் ஏகாதிபத்திய உலகமயமாதல் நிகழ்ச்சி நிரல்களுக்கு உட்பட்டவையேயாகும்.

மேலும் இன்றைய உலகமயமாதலின் கீழான பொருளாதார அமைப்பானது, மக்கள் பலவழிகளிலும் சுரண்டப்படும் அதே வேளை, மக்கள் மத்தியில் குறுக்குவழிகள் ஏமாற்றுக்களை ஊக்குவிக்கும் வகையிலேயே வழிகாட்டி நிற்கிறது. இக்கரைக்கு அக்கரை பச்சை போன்ற தோற்றத்தைக் காட்டிக் கானல் நீரை நம்பிச் செல்லுமாறு மக்களைத் தூண்டி வருகின்றது. வங்கிகள், நிதி நிறுவனங்கள், ஏனைய

வர்த்தக மையங்கள், என்பன மக்கள் மத்தியில் ஆசை வார்த்தை கூறிக் கடன்களை வழங்கி அவற்றை வட்டியோடு அறவிட்டு வருகின்றன. இதனால் சாதாரண மக்கள் கடன் பழுவிற்குள் சிக்கித் தவித்து வருவதைக் காணமுடிகிறது. இவ்வாறு நோக்கும்போது, தொண்ணூறு சதவீதமான மக்கள் இன்றைய அமைப்பாலும் அதனைக் கட்டிக்காத்து வரும் ஆட்சி அதிகார வர்க்கத்தினராலும் சுரண்டி அடக்கப்படும் நிலை தெளிவானது. சகல நிலைகளின் ஊடாகவும் உழைக்கும் மக்கள் பிரச்சினைகளுக்கும் நெருக்கடிகளுக்கும் உள்ளாகி வருவதையே காண முடிகிறது.

நாட்டுக்கு வெளியே, மத்திய கிழக்கு நாடுகளில் பல லட்சம் ஆண்களும் பெரும் அளவுக்குப் பெண்களும் தொழில் புரிந்து வருகின்றனர். அவர்கள் அனுப்பும் பணம் அரசாங்கத்திற்கு வரப்பிரசாத மாக உள்ளது. ஆனால் அவர்கள் கடும் வெய்யிலிலும் குளிரிலும் கடும் உழைப்பைக் கொடுத்து வருகின்றனர். அதைவிடப், புலம்பெயர்ந்து ஐரோப்பிய அமெரிக்க அவுஸ்திரேலிய நாடுகளில் வாழ்வோரில் தமிழர்களே அதிகம். அவர்களது பண அனுப்பலும் அதன் மூலமான பண்பாட்டுச் சீரழிவுகளும் விரிவாக நோக்க வேண்டியவைகளாகும். அதே வேளை புலம் பெயர்ந்தவர்களில் குறிப்பிட்ட தொகையினர் மனிதநேய உதவிகளுக்காகப் பணம் அனுப்புவதும் காணவேண்டிய வையாகும்.

அதேவேளை நாட்டின் சமூக பண்பாட்டுத்துறைகள் மிக வேகமான சீரழிவுகளுக்குள் அமுங்கி வருவதைக் காணமுடிகின்றது. கல்வியும் சுகாதாரமும் என்றுமில்லாத அளவிற்கு கீழிறங்கி வருகின்றன. சமூக நலன் மக்கள் நலன் என்பன அரசாங்க நிகழ்ச்சி நிரலில் இருந்து அகற்றப்பட்டு மூன்று தசாப்தங்களாகிவிட்டன. தனியார்மயம் எப்போது வரவேற்கப்பட்டதோ அன்றிலிருந்து கல்வியும் சுகாதாரமும் சீரழிவை நோக்கிச் செல்ல ஆரம்பித்துவிட்டன. அந்நிலை இன்று அதி உச்ச நிலையில் காணப்படுகிறது. அரச பல்கலைக்கழகங்களுக்கு நிகராகத் தனியார் பல்கலைக்கழங்களை கொண்டு வந்து சேர்த்துவிட அரசாங்கம் துடியாய்த் துடித்து நிற்கிறது. நாட்டின் இலவசக் கல்வியானது இன்று குற்றுயிராக்கப்பட்டு வருகிறது. அதன் காரணமாகவே பல்கலைக்கழக ஆசிரியர் சம்மேளனம் கல்விக்கு மொத்த தேசிய வருமானத்தில் ஆறு சதவீதம் ஒதுக்கப்பட வேண்டும் எனக் கோரி நூறு நாட்கள் போராடி நின்றனர். ஆனால் அரசாங்கம் அதனைப் பலவழிகளிலும் முறியடித்துக் கொண்டது. கல்விக்கு 2011இல் 2.06 சதவீதத்தையும் 2012ல் 1.85 சதவீதத்தையும் மட்டுமே மொத்த தேசிய வருமானத்திலிருந்து கல்விக்கு

அரசாங்கம் ஒதுக்கியிருந்தது. அதனால் கல்வித் துறை நெருக்கடி அதிகரித்தே செல்கிறது.

இவ்வாறே சுகாதாரத் துறையின் அரசாங்கப் பொது மருத்துவ மனைகள் உரிய கவனிப்பின்றி படிப்படியாகச் சீரழியவிடப்பட்டுள்ளன. 2012ல் மொத்த தேசிய வருமானத்திலிருந்து 1.31 வீதமே சுகாதாரத்துறைக்கு ஒதுக்கப்பட்டது. இதுவும் 2013ல் 1.05 ஆகியிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். ஒரு நாட்டின் கல்வி சுகாதாரத் துறைகளைக் கவனிக்காத எந்தவொரு ஆட்சியும் மக்கள் விரோத ஆட்சியேயாகும். அதே வேளை தனியார் மருத்துவமனைகளும் வைத்தியர்களும் நோயாளர்களிடம் இருந்து பணத்தைச் சுளைசுளையாகக் கறந்து கொள்கின்றனர். பணம் இருந்தால் மட்டுமே ஒருவருக்கு நோயிலிருந்து தப்ப முடியும் அல்லாதுவிடின் இறந்து போக வேண்டியதுதான் என்ற நிலையே நீடித்து வருகிறது. இதற்கு நல்லதோர் உதாரணம் இலங்கையில் டெங்கு நோய் ஒழிப்பு பற்றிய அரசாங்கத்தின் நிலைப்பாடாகும். சுகாதாரத் துறையின் தனியார்மயத்தால் உழைக்கும் மக்களே பாதிக்கப்பட்டு வருகின்றனர். மேலும் சூழல் மாசடைதலால் நாட்டில் நோய்கள் பெருகி வருகின்றன. புற்றுநோய், இருதயநோய், சிறுநீரக நோய், காசநோய் போன்றன மக்களைப் பற்றிப் பீடித்து வருகின்றன. ஏகாதிபத்திய லாப வெறி மிக்க உற்பத்தி முறைமையும் விநியோக நுகர்வுமே சூழல் மாசடைதலின் அடிப்படையாகின்றன. இதனால் இயற்கை நிலைகள் பாதிக்கப்படுகின்றன. இவற்றில் மக்களை விழிப்படைய வைத்தல் அவசியமானதாகும்.

இவ்வாறே இலங்கையின் பௌத்த இந்து இஸ்லாமிய கிறிஸ்தவ மதங்களின் ஊடாகவே பண்பாடு இருந்து வருவதாகப் பெருமை பேசப்படுகின்றது. ஆனால் நாடு இன்று பண்பாட்டின் பேரால் மிக மோசமான சீரழிவுகளைச் சந்தித்து வருகிறது. உலகமயமாதலின் கீழான நச்சுக் கலாசார ஊடுருவல் சகலரிடத்திலும் இலகுவாகவே குடிகொண்டு நிற்கிறது. பெருமையாகக் கூறப்படும் மதப்பண்பாடுகள் எனப்படுபவை அத்தகைய நச்சுக் கலாசாரங்களோடு இயைபுடையவாகிச் சகல கழிவுகளையும் உள்வாங்கி வருகின்றன. இத்தகைய பண்பாட்டுச் சீரழிவுகளுக்குள் உழைக்கும் மக்களும் குறிப்பாக இளைஞர் யுவதிகளும் சிக்குண்டு வரும் போக்கு அதிகரித்துக் காணப்படுகிறது. சினிமா, சின்னத்திரைகள், இணையத்தளங்கள், அச்சு ஊடகங்கள் மூலமான நச்சுத்தனங்கள், தாராளமாகப் பரப்பப்படுகின்றன. மேலும் போதைப் பொருள் பாவனையும் விற்பனையும் வளர்ந்து செல்கின்றன. பெண்கள் சிறுவர்கள் மீதான பாலியல் வன்புணர்ச்சிகள் சித்திரவதைகள்

பெருகிவருகின்றன. சட்டங்கள் இருந்தபோதிலும் மதுப் பாவனையும் புகைத்தலும் அதிகரித்துச் செல்கின்றன. இவற்றால் இளந் தலைமுறையினர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். இவற்றிலிருந்து மக்களை மீட்டெடுத்து அவற்றுக்கு எதிராக புதிய பண்பாட்டிற்கான முன் முயற்சிகளை முன்னெடுப்பது என்பது கடுமையான சவால்களை எதிர்நோக்கியதாகவே உள்ளது.

## சர்வதேச நிலைமைகள்

**தோழர்களே!**

இன்றைய சர்வதேச நிலைமைகள் எமது 5வது அனைத்திலங்கை மாநாடு முன்வைத்த கணிப்பீடுகளின் அடிப்படையிலேயே சென்று கொண்டிருக்கின்றன. ஐக்கிய அமெரிக்காவும் அதன் தலைமையிலான நேட்டோ நாடுகளும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஆக்கிரமிப்பு யுத்தங்களை நடாத்தி வருகின்றன. நாடுகளின் வளங்களைக் கொள்ளையிட்டு தமது ஏகாதிபத்திய பொருளாதார அரசியல் நலன்களைப் பேணிக் கொள்ளவே நாசகார யுத்தங்களை நடாத்துகின்றனர். மனித குலத்திற்குப் பேரழிவுகளைக் கொண்டுவரத் தொடர்ந்தும் பயங்கர ஆயுதங்களை உற்பத்தி செய்து வருவதுடன் அவற்றை விற்றுப் பெருலாபம் பெறுவதற்காக நாடுகளிலும் நாடுகளுக்கு இடையேயும் யுத்தங்களை மூட்டி விடுகின்றனர். அத்துடன் உள்நாட்டுப் பிரச்சினைகளை மோதல்களாக மாற்றி உள்நாட்டு, யுத்தங்களை திரை மறைவில் இருந்து ஊக்குவிக்கின்றனர். இலங்கையில் இடம்பெற்று வந்த தேசிய இனப்பிரச்சினை காரணமான யுத்தம் இதற்குச் சிறந்த உதாரணமாகும். ஈராக்கில் பொய்க் காரணம் காட்டி ஆக்கிரமிப்பு நடாத்திய அமெரிக்காவும் நேட்டோ நாடுகளும் அந்நாட்டை சின்னாபின்னப்படுத்தி எண்ணை வளத்தை மேன்மேலும் உறுஞ்சித் தமதமாக்கிக் கொண்டனர். அது மட்டுமன்றி இன்று அந்த நாட்டில் முஸ்லீம் பிரிவுகள் மத்தியில் மோதலும் அழிவுகளும் இடம்பெறுவதற்கு வழிவகுத்து நிற்கின்றனர். அதே போன்றே இன்று ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா தலைமையிலான ஆக்கிரமிப்பும் அதற்கு எதிரான தலிபான்களின் போராட்டமும் இடம்பெற்று வருகின்றன. அழிவுகள் அந்நாட்டிற்கும் மக்களுமேயாகும். அதேவேளை அமெரிக்கா ஈராக்கிலும் ஆப்கானிஸ்தானிலும் அடிக்குமேல் அடிவாங்கிக் கொள்கிறது.

அடுத்து ஈரான் மீது குறிவைத்து அமெரிக்கா செய்து வரும் நடவடிக்கைகள் மிக மோசமானவைகளாகும். மத்திய கிழக்கில் எண்ணெய் வளத்திற்கும் தமது ஆதிக்கத்திற்கும் தடையாக இருந்த ஒவ்வொன்றையும் தகர்த்து தமது ஆதிக்கத்தை நிறுவுவதே ஏகாதிபத்திய நோக்காகும். அத்துடன் தனது நச்சுத்தனக் கூட்டாளியாக உருவாக்கப்பட்ட இஸ்ரேலைப் பாதுகாப்பதும் அதன் ஆழமான நோக்காகும். அதன் வழியிலேயே லிபியாவை உள்நாட்டு யுத்தக் கிளர்ச்சிக்கு உட்படுத்தி கேணல் கடாபியின் ஆட்சியை வீழ்த்தி அவரையும் அழித்தக் கொண்டது. அதன் போக்கில் இப்போது சிரியாவில் தலையிட்டு அந்நாட்டு ஆட்சியைக் கவிழ்த்துக் கொள்ளப் படாத பாடுபடுகிறது. மேலும் ஆசியாவில் வடகொரியா மீது தலையீடு செய்து அணு ஆயுத உற்பத்தி என்ற குற்றச்சாட்டைச் சுமத்தி வருகிறது. மத்திய கிழக்கில் எழுந்த மக்கள் எழுச்சிகளைத் திசைதிருப்பி தமது நலன்களுக்காக நேரடியாகவும் மறைமுகமாகவும் செயலாற்றி வருகிறது அமெரிக்கா. எகிப்தில் இடம்பெற்ற மக்கள் எழுச்சியின் பலாபலன்கள் மக்களைச் சென்றடைய விடாது தடுத்து வருகிறது. அங்கு ஜனநாயகம் மீள அரங்கிற்கு வருவதைத் தடுத்து தனது நம்பிக்கைக்குரிய சக்திகளை தொடர்ந்து வைத்திருக்கவே அமெரிக்கா அந்நாட்டு ராணுவத்தோடு சேர்ந்து செயல்பட்டு வருகிறது.

இதேவேளை தனது உலகளாவிய பொருளாதார ராணுவ அரசியல் ஏக ஆதிக்கத்திற்கு சவாலாக வளர்ந்து வரும் ஒவ்வொரு நாட்டின் மீதும் அமெரிக்கா கண்காணிப்புடன் இருந்து தமது காய்களை நகர்த்தி வருகிறது. இதில் முன்னாள் சோஷலிச நாடான ரஷியா, அண்மைக்காலமாக சோஷலிசத்திலிருந்து விலகிச் சென்ற சீனா ஆகியன அமெரிக்காவின் உறுத்தலுக்கு உள்ளாகி நிற்கின்றன. இந்தியாவின் ஆளும் வர்க்கத்தைத் தமது மூலோபாயப் பங்காளியாக்கிக் கொண்ட அமெரிக்கா சீனாவைச் சுற்றி வளைப்பதில் பொருளாதார ராணுவத் தந்திரோபாயத்தை வகுத்து நிற்கிறது. ஆசிய பசுபிக் பாதுகாப்புத் திட்டம் என்பது அத்தகையதேயாகும். சீனா இன்று சோஷலிசத் தடத்தில் பயணிக்கும் நாடு அல்ல. அது முற்றிலும் தனது தேச நிர்மாணத்திற்கும் தனது பொருளாதார வளர்ச்சிக்கும் உரிய பாதையில் செல்லும் நாடாகவே செயற்பட்டு வருகிறது. கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளில் அதன் பொருளாதாரம் அபரீத வளர்ச்சி கண்டுள்ளது. அந்நிய முதலீடுகள் உள்ளீர்க்கப்பட்டு அதன் ஊடாக உற்பத்திகளும் உலக அளவிலான வர்த்தகமும் விரிவு பெற்றுள்ளன.

ஆசிய ஆபிரிக்க லத்தீன் அமெரிக்க நாடுகளில் அதன் வர்த்தகமும் முதலீடுகளும் அதிகரித்துள்ளன.

இவ்வாறு சீனப் பொருளாதாரம் நிலையானதாகவும் வளர்முகமாகவும் உள்ள அதேவேளை அமெரிக்க மேற்குலக நாடுகளின் பொருளாதாரம் வீழ்ச்சிகளைக் கண்டு கீழ்நோக்கிச் செல்ல ஆரம்பித்தன. சீனாவின் பொருளாதார வளர்ச்சி உலக வர்த்தகப் போட்டியினை உருவாக்கி வருவதுடன் முதலாளித்துவப் போட்டியாகவும் முன்சென்று கொண்டிருக்கிறது. இதனைச் சோஷலிசப் பொருளாதார வளர்ச்சி என்று கூறமுடியாது. முதலாளித்துவ பாதையில் பயணிக்கும் இன்றைய சீனாவினால் உலக மக்களின் ஏாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களுக்கோ விடுதலை இயக்கங்களுக்கோ எவ்வித உதவியும் ஆதரவும் செய்ய முடியாத நிலையே காணப்படுகிறது.

ஆனால் உலகின் பல நாடுகளும் நாடுகளில் உள்ள மக்களும் ஏகாதிபத்திய எதிர்ப்பிலும் போராட்டங்களிலும் ஈடுபட்டு வருவதைக் காணமுடிகிறது. இதில் லத்தீன் அமெரிக்க நாடுகள் முன்னிலை வகிக்கின்றன. சின்னஞ் சிறிய நாடான கியூபாவின் அமெரிக்க ஏகாதிபத்திய எதிர்ப்பு முன்மாதிரியில் வெனிசுலேவா, ஈக்குவடர், பொலிவியா, நிக்கரகுவா, பிரேசில், ஆஜன்ரீனா போன்ற லத்தீன் அமெரிக்க நாடுகளில் ஏகாதிபத்திய எதிர்ப்பு வலுவடைந்து அமெரிக்கா விற்கு அச்சமூட்டும் சவாலாகி நிற்கின்றன. அங்குள்ள மக்களின் அரசியல் விழிப்புணர்வும் அரசாங்கங்களின் நடவடிக்கைகளும் பலநிலை அளவுகளில் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை அம்பலமாக்கி எதிர்த்து வருவதற்கு அடிப்படையாக இருந்து வருகின்றன.

இன்று உலகப் பொருளாதாரத்தை ஆதிக்கம் செய்வதிலும் அதனைப் பாதுகாக்கும் பாரிய ராணுவத்தைக் கொண்டிருப்பதிலும் அவற்றுக்கான ஆயுத உற்பத்தியிலும் ஆக்கிரமிப்புகளில் ஈடுபட்டு வருவதிலும் அமெரிக்காவே முன்நிலை வகிக்கின்றது. அதன் கூட்டாளிகளாக ஐரோப்பிய நாடுகளும் அவுஸ்திரேலியா யப்பான் போன்ற நாடுகளும் இருந்து வருகின்றன. இத்தகைய கூட்டில் பெரும் ஜனநாயக நாடு எனக் கூறிக் கொள்ளும் இந்தியா மறைவாகவும் வெளியாகவும் தன்னை இணைத்து நிற்கின்றது. இந் நிலைப்பாட்டின் ஊடாக இந்தியா தென்னாசியப் பிராந்தியத்தில் தன்னை ஒரு மேலாதிக்க வல்லரசாக வலுப்படுத்தி வருகிறது. இதன் காரணமாக, இந்திய பிராந்திய மேலாதிக்கமானது தென்னாசிய நாடுகளான பாகிஸ்தான், பங்ளாதேஷ், இலங்கை, மாலைதீவு, நேபாளம் போன்ற நாடுகளுடனும் மக்களுடனும்

முரண்பாடுகளை வளர்த்து நிற்கின்து. சீனாவுடன் முரண்பட்டு நிற்கிறது. இப்போது ஆப்கானிஸ்தான், மியன்மார், வியட்நாம், இந்து சமுத்திரப் பிராந்தியம் ஆகியவற்றில் தனது ஆதிக்கத்தை வலுப்படுத்த முற்பட்டுள்ளது.

நமது நாட்டைப் பொறுத்தவரை அமெரிக்க ஏகாதிபத்தியமும் மேற்குலக நாடுகளும் தமது ஆதிக்கப் பிடிக்குள் கொண்டுவரவே முயன்று வருகின்றன. அதேவேளை, தனது கைகளுக்கும் கால்களுக்கும் கீழே இலங்கை இருப்பதையே இந்தியா விரும்புகின்றது. இவ்விடயத்தில் அமெரிக்க-இந்தியப் போட்டி இருப்பினும் அமெரிக்கா இந்தியாவை வெளிப்படையாகப் பகைத்துக் கொள்ள விரும்பவில்லை. ஏனெனில் தமது மூலோபாயப் பங்காளியான இந்தியா தனக்கு விரோதமாகப் போகமாட்டாது என்பதில் அமெரிக்காவிற்கு நம்பிக்கை உண்டு. அதனாலேயே சீன-இந்திய முரண்பாட்டை எப்போதும் கொதிநிலையில் வைத்திருக்க அமெரிக்கா காய்களை நகர்த்தியவாறு இருந்துவருகிறது. இத்தகைய சூழலைப் பயன்படுத்தி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனக்கும் சிறி லங்கா சுதந்திரக் கட்சிக்கும் நீண்டகாலமாக இருந்து வரும் சீன உறவை மிக நெருக்கமாக்கித் தனது ஆட்சி அதிகாரத்தை முன்னெடுத்து வருகிறார். சீனாவும் தனது வர்த்தகம், முதலீடு, கடன் வழங்கல் போன்றவற்றை அதிகளவுக்கு வழங்கி இலங்கையைத் தமது பக்கத்தில் வைத்திருப்பதைத் தந்திரோபாயமாக வைத்து வருகிறது.

இவ்வாறான சர்வதேசச் சூழலில் உலகின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டங்களும் மாக்சிச லெனினிச இயக்கங்களும் மாக்சிச சோஷலிச நம்பிக்கைகளுடன் தம்மை முன்நோக்கி நகர்த்தி வருகின்றன. எனவே நாமும் அந்த நம்பிக்கையின் ஒரு பகுதியாகி நமது நாட்டில் ஏகாதிபத்திய எதிர்ப்பையும், மாக்சிச லெனினிச இயக்கத்தையும் முன்னிலும் பார்க்க வேகத்துடன் முன்னெடுத்து எமது சர்வதேசக் கடமையினை முன்னெடுக்க வேண்டும். அதனை உறுதியாக முன்னெடுப்போம்.

**தோழர்களே!**

மேலே கூறப்பட்ட விடயங்கள் இன்றைய இலங்கைச் சூழலில் காணப்படும் அரசியல் பொருளாதார சமூகப் பண்பாட்டுத் தளங்களில் காணப்படும் யதார்த்த நிலைமைகளையும் சர்வதேசப் போக்குகளையும் பற்றிய எமது மாக்சிச லெனினிச மாஓ சேதுங் சிந்தனை நிலைப்பாட்டின்

ஊடான ஒரு சுருக்கமான கண்ணோட்டமாகும். இவற்றின் விரிவான விளக்கங்களை ஏற்கனவே ஐந்தாவது அனைத்திலங்கை மாநாட்டின் (2010) அறிக்கையிலும் பின்பு வேலைத்திட்டத்திலும் (2011) காண முடியும். அவற்றில் கூறப்பட்டவைகளே எமது அடுத்த அனைத்திலங்கை மாநாடு (2015) வரையான எமது கொள்கை நிலைப்பாடாம் என்பதை மனதில் கொண்டு எமது கட்சி வேலைகளை முன்னெடுத்துச் செல்வோம். அரசியல் ரீதியிலும் அமைப்புவாயிலாகவும் மக்கள் மத்தியில் நமது அரசியல் வேலைகளை முன்னெடுத்து வரும் போது பல்வேறு சவால்களையும் சோதனைகளையும் அடக்குமுறைகளையும் எமது கட்சி எதிர்நோக்கி நிற்கின்றது. அவற்றை எல்லாம் நாம் மிகுந்த அர்பணிப்புடன் எதிர்கொண்டு மாக்சிசம் லெனினிசம் மாஓ சேதுங் சிந்தனை காட்டும் புரட்சிகரப் பாதையில் உழக்கும் மக்கள் மத்தியிலான வெகுஜன வேலைகள் வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வோம். இன்றைய அரசியல் அமைப்பும் அதன் கீழான நிறைவேற்று அதிகாரமும் கொண்ட ராஜபக்ச சகோதரர்களின் தலைமையிலான தரகுமுதலாலித்துவ பேரினவாத ∴பாசிச ஆட்சிக்கு எதிராக மக்களை அணிதிரட்டுவதையும் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுப்பதையும் நமது உடனடி இலக்காகக் கொண்டு செயற்படுவோம். இதனைக் கட்சியின் 35வது ஆண்டு ஆரம்பத்தின் (03.07.1978 - 03.07.2013) புரட்சிகரத் திடசங்கற்பமாகக் கொள்வோம்.

- **வாழ்க மாக்சிசம் லெனினிசம் மாஓசேதுங் சிந்தனை!**
- **வளர்க புதிய-ஜனநாயக மாக்சிச-லெனினிசக் கட்சி**

**சி.கா.செந்திவேல்**
**பொதுச் செயலாளர்**

**வெ.மகேந்திரன்**
**தேசிய அமைப்பாளர்**

*****

# மலையகத் தமிழர்களின் இன அடையாளமும் மொழியும்

**ACR ஜோன்**

## முன்னுரை

மொழி ஒருவருக்கொருவர் தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கான அடிப்படை ஊடகமாகும். உயிருள்ள பிராணிகளில் மனிதனுக்கு மாத்திரமே அறிவைப் பயன்படுத்தி மொழியைப் பிரயோகிக்க முடிகின்றது. இது மனிதனுகு உரித்தான சிறப்பம்சமாகும். மொழியின் உருவாக்கத்தில் மனித உழைப்பின் பாத்திரம் முக்கியமானது. மனிதர் முதலிற் சைகைகளின் மூலமும் பின் அதன் வளர்ச்சியாக ஒலி எழுப்புவதன் மூலமும் தகவல்களைப் பரிமாறினர். பின் அர்த்தமுள்ள சொற்களை பயன்படுத்தலுக்கு, குறிப்பாக பொருட்களை பெயரிட்டு அழைக்கின்ற ஆற்றலுக்கு, மனிதன் முன்னேறுகின்றான். மனித குலச் சிந்தனை வளர்ச்சியில் மொழியின் பங்களிப்பு பிரதானமானது. குறிப்பாக ஒலி, சொற்கள், வாக்கியம், எழுத்து, அச்சு, நவீன இலத்திரனியல் ஊடகங்கள் போன்ற ஒவ்வொன்றிலும் சமூக வளர்ச்சிற்கேற்ப மொழியில் அவற்றின் பயன்பாடு மாறுபடுகின்றது.

இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையிலான ஊடாட்டமாகவே மனித வாழ்க்கை உள்ளது. மொழியின் வரலாற்று அடிப்படையான இலக்கண அமைப்பில் மனித உழைப்புக்கும் மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான உறவுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது. எளிமையான ஒரு வாக்கிய அமைப்பில் மனிதன் எழுவாயாகவும், அவனது உழைப்பு பயனிலையாகவும் உழைப்பிற்குப் பயன்படுத்தும் கருவி செயற்படு பொருளாகவும் அமைக்கின்றன. குறிப்பாக, மொழியின் தோற்றத்திற் கூட்டு உழைப்பும் கூட்டுச் செயற்பாடுகளும் முக்கியபங்கு

வகிக்கின்றன. அவ்வாறே, மொழியானது ஒரு குறிப்பிட்ட சமூதாயத்திற்கு அல்லது ஒரு இனக்குழுமத்திற்கு பொதுமையானதாகின்றது.

ஒரு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தின் பண்பாடும் அவர்களது வாழ்வியல் பிரதேசம் போன்றவற்றின் செல்வாக்கும் ஒரு மொழியில் தாக்கம் செலுத்துகின்றன. உலகில் உள்ள ஒவ்வொரு மொழிக்கும் தனித்துவங்கள் உள்ளன. சில மொழிகளுக்கிடையே ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. உலகின் எந்த மொழியினதும் பயன்பாட்டுத் தன்மை என்றென்றும் ஒரே மாதிரியாக நிலைத்து நிற்பதில்லை. அது இயங்கியல் அடிப்படையிற் காலத்துடன் மாறுவதுடன் மொழிநடையும் பயன்பாட்டு முறைகளும் குறிப்பிட்ட காலத்தின் வாழ்வியல் அம்சங்களைப் பிரதிபலிக்கும் அடையாளங்களாகவும் இருக்கின்றன. ஒரு மொழியில் உள்ள ஒரு சொல் இன்னொன்றாக மாறுதலும், ஒரு மொழியில் உள்ள சொல் உள்ளவாறோ மருவியோ இன்னொரு மொழியில் கலத்தலும் இயல்பானது. மறுபுறம், ஒரு இனம் இன்னொரு இனத்தின்மீது ஆதிக்கம் செலுத்துவதன் பயனாகவோ ஒரு இனக்குழுமம் ஒரு பிரதேசத்தில் இருந்து இன்னொரு பிரதேசத்திற்குப் பெயருவதன் பயனாகவோ ஒரு மொழியின் தாக்கம் இன்னொரு மொழியிற் தெரிவற்கான உதாரணங் களை உலகின் பல பாகங்களிலும் காணலாம். அத் தாக்கம் சொற்க ளிலோ உச்சரிப்பு முறைகளிலோ வரிவடிவங்களிலோ அமையலாம்.

ஒரு இனத்தினுடையதோ ஒரு பண்பாட்டினுடையதோ பிரதானமான அடையாளமாக மொழி காணப்படுவதால் மொழி அழிகின்றபோது குறிப்பிட்ட இனத்தின் பண்பாட்டு அடையாளமும் அழியும் அல்லது சிதையும் போக்கை வாலாற்றிற் காணலாம். ஒரு காலத்தில் ஆதிக்கம் செலுத்திய மொழிகளும் மேன் மக்களுக்கு உரியன எனப்பட்ட மொழிகளும் புனிதமானவை எனப்பட்ட மொழிகளும் வழக்கொழிந் துள்ளன. உதாரணமாக, கிரேக்க, லத்தீன், ஹீப்புரு, சமஸ்கிருத, பாளி மொழிகள் நடைமுறையில் பயன்பாடற்றுப் போனதைக் குறிப்பிடலாம். சாமானிய மனிதர்களாற் பயன்படுத்தப்படும் மொழிகள் பலவும் பல்வேறு மாற்றங்களுக்கு உட்பட்டு ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நிலைத் துள்ளதையும் எடுத்துரைக்கவேண்டும்.

ஒரு இனம் இன்னொரு இனத்தின் மீது ஆதிக்கம் செலுத்தும் போது, ஆதிக்கத்துக்குட்பட்ட இனத்தின் அடையாளத்தை இல்லாதொழிக்க அவர்களின் மொழி, ஆவணங்கள் மற்றும் பயன்பாட்டு அம்சங்களைத் திட்டமிட்டு ஒழிக்கின்ற, சிதைக்கின்ற அல்லது திரிக்கின்ற நடைமுறை களும் வரலாற்றில் நடந்துள்ளன, நடக்கின்றன.

## மலையகத்தில் தமிழ் மொழி

பிரித்தானியக் கொலனி ஆதிக்கத்தின்போது தென் இந்தியாவின் தமிழகத்தில் இருந்து இலட்சக்கணக்கான தமிழர்கள் உழைப்பிற்காக உலகின் பல பாகங்கட்கு ஆங்கிலேயர்களால் குடிபெயர்த்தப்பட்டார்கள். பல நாடுகளில் (உதாரணமாக ஃபிஜி, மொரிசியஸ், தென் ஆபிரிக்கா போன்ற நாடுகளில்) தமிழ் மொழி வழமையான பயன்பாட்டில் இல்லை. அதேநேரம், மலேசியா, சிங்கப்பூர், இலங்கை போன்ற நாடுகளில் வாழும் புலம்பெயர்த்த மக்களிடையே தமிழ் மொழி தொடந்தும் பயன்பாட்டில் உள்ளது. குறிப்பாக, இலங்கையில் மலையகத் தமிழர் மத்தியில் இலக்கிய, கல்விப் புலங்களில் தமிழ் வளர்ச்சி பெற்றிருப்பது அவர்கட்கான தனித்துவ அடையாளத்தை ஏற்படுத்தியுள்ளது.

மலையகத் தழிர்கள் மத்தியில் அவர்களின் தாய்மொழி தொடர்ந்தும் உயிர்புடன் இருப்பதற்குப் பின்வரும் அம்சங்களைச் சில காரணங்களாகக் கூறலாம்.

- மலையகத் தமிழர்களின் வாழ்வியற் பிரதேசம் தமிழகத்திற்கும் இலங்கையின் வடக்கு-கிழக்கு பிரதேசங்களுக்கும் அண்மையில் இருப்பது, தொடர்புகளையும் உறவுகளையும் பேண வாய்பாக உள்ளமை.
- தமிழகத்தில் ஏற்பட்ட திரவிடர் இயக்கச் செயற்பாடுகளும் வடக்கு-கிழக்கில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் தமிழ் தேசியத்தின் எழுச்சியின் தாக்கமும் மலையகத் தமிழர்கள் மத்தியிலும் ஈர்ப்பினை ஏற்படுத்தி இருக்கின்றமை.
- இலங்கைப் பெருந்தோட்டத் தொழிலாளர்களில் 90 சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் மலையகத் தமிழர்களாக இருப்பதால் அத் தொழிற்றுறை சார்ந்த பிரதேசத்தில் அவர்களின் அடையாளத்தைப் பேண ஏதுவான நிலை காணப்படுதல்.
- இலங்கையில், முக்கியமாக 1956இல் இருந்து, தொடர்ந்து வந்த மொழியுரிமைப் போராட்டங்களின் பயனாக அரச நிருவாகத்தில் தமிழ் மொழிப் பிரயோகம் அமுலில் உள்ளமை.
- ஆரம்பக் கல்வி முதல் பல்கலைக்கழகம் வரை தமிழ் மொழியில் கல்வி கற்கின்ற வாய்ப்பு.
- நூல்கள், பத்திரிகைகள், சஞ்சிகைகளைத் தமிழில் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் இலக்கியப் படைப்புகளை வெளியிடுவதற்கான வாய்ப்புக்களும் உள்ளமை.

## மலையகத் தமிழர்களின் பிரயோக மொழியின் தனித் தன்மைகள்

இலங்கையின் முக்கிய தேசிய இனங்களில் ஒன்றாகிய மலையகத் தழிர்கள் பிரயோகிக்கும் தமிழ் மொழி, வட்டார வழக்கு என்ற அடிப்படையில், அவர்களுக்கு உரித்தான சில தனித் தன்மைகளை வெளிப்படுத்துகின்றது. குறிப்பாக அவர்களின் உழைப்புச் செயற்பாடுகள், வாழ்வியல், பிரதேசம், பிற இனத்தோருடன் சேர்ந்து வாழ்வதன் விளைவுகள் போன்றவை அவர்களின் மொழியின் தனித்துவத்தைப் பிரதிபலிக்கின்றமையைப் பின்வரும் உதாரணங்கள் கூறுவன.

1. **உழைப்புச் செயற்பாடுகள்:** பெருந்தோட்டத் தொழிற்துறை, இலங்கைத் வாழும் தோட்டத் தொழிலாளர்களின் பிரதான அடையாளமாக காணப்படுவதனால் இவர்களின் பயன்பாட்டு மொழியிலும் பண்பாட்டு அம்சங்களிலும் உழைப்பு செயற்பாடு தாக்கத்தினை செலுத்துகின்றது. உதாரணமாக பெரட்டு (தொழிலாளர் கூடும் இடம்), கவ்வாத்து (தேயிலைச் செடிகளை வெட்டுதல்), உஸ்டோரு (தேயிலை தொழிற்சாலை), ரோத முனி (தேயிலை தோட்டத் தொழிலாளர் வணங்கும் தெய்வம்), லயம் (தோட்டத் தொழிலாளர் குடியிருப்பு), தவரணை (தேயிலை நாற்றுகளைப் பயிரிடும் இடம்).

   மேலும் தொழிலாளர்கள் மத்தியில் இருக்கின்ற நாட்டார் பாடல்கள், கதைப் பாடல்கள், பழமொழிகள் போன்ற வழக்காறுகளிலும் அவர்களின் இன அடையாளத்திற்கான தனித்துவ அம்சங்கள் காணப்படுகினறன.

2. **வாழ்வியற் பிரதேசம்**: ஒரு குறிப்பிட்ட நிலத்தின் தன்மை அங்கு வாழும் மக்களின் வாழ்க்கை முறையைத் தீர்மானிக்கின்றது. அதே நேரம், ஒரு மக்கள் குழுவின் பண்பாட்டு வெளிப்பாடுகள் மண்ணுடனோ வரையறுக்கப்பட்ட நிலப்பரப்புடனோ அவர்களை அடையாளப்படுத்த உதவுகின்றன. மலையகத் தமிழர்கள் தாங்கள் வாழும் வாழ்வியிற் பிரதேசத்தில் தங்களுக்கான பண்பாட்டுத் தளத்தைக் கட்டியுள்ளனர்.

தமிழகத்தில் வரட்சியான தாழ்நிலப் பகுதியில் வாழ்ந்துபழகிய மக்களுக்கு இலங்கையின் மலைப்பாங்கான செழிப்பான நிலப்பகுதியின் நில அமைவு, காலநிலை போன்றன புதிய அனுபவங்களை ஏற்படுத்தின.

மலையகத் தமிழர்கள் வாழும் பிரதேசங்களின் பல்வேறு இடப் பெயர்கள் அவர்களின் தனித்துவத்தையும் அடையாளங்களையும் சுட்டுவனவாக இருக்கின்றன. தென் தமிழகக் கிராமங்களின் பெயர்கள் பலவும் ஊர் அல்லது பட்டி என்று முடியும். மலையகத் தமிழர்களின் இருப்பிடங்களின் பெயர்கள் பொதுவாகத் தோட்டம், காடு, மலை என முடிவடைகினறன. தாங்கள் குடியிருக்கும் இடங்களைத் தோட்டம் என்றும் தங்கள் குடியிருப்புகளுக்குப் பக்கத்தில் உள்ள சிங்களக் கிராமங்களை நாடு என்று அழைக்கும் நடைமுறை இன்றும் உள்ளது.

இலங்கையில் உள்ள பெருந்தோட்டங்களுக்குப் பொதுவாக உத்தியோகபூர்வமான ஆங்கிலப் பெயர்கள் இருந்தாலும், ஒவ்வொரு தோட்டத்திற்கும் தோட்டத் தொழிலாளர்கள் அதை அழைக்கின்ற தமிழ்ப் பெயர் இருக்கின்றது. இத் தோட்டப் பெயர்களுக்குப் பின்னால் பெயருக்கான காரணங்களும் வரலாற்று தகவல்களும் காணப்படுகின்றன. உதாரணமாக, ‘இராயன் துரை தோட்டம்’ என்பது, இராயன் என்ற குடும்பப் பெயரைக் கொண்ட வெள்ளைகாரர்களுக்குச் சொந்தமாக இருந்தமையால் அப்பெயர் கொண்டு அழைக்கப்படுவதாக கூறுகின்றனர். அதே போன்று தோட்டத்திற்குள் இருக்கின்ற பல்வேறு இடங்களின் பெயர்களை ஒட்டி வரலாற்றுத் தகவல்கள் உள்ளன. உதாரணமாக, டயகம தோட்டத்தில் ‘ஹர்த்தால் மொடக்கு’ என்ற ஒரு இடம் காணப் படுகின்றது. 1956ம் ஆண்டு டயகம தோட்டத் தொழிலாளர் போராட்டத் தில் ஆபிரகாம் சிங்க என்ற ஒரு தொழிலாளி சுட்டுக் கொள்ளப்பட்டார். அதன்போது தோட்டத் தொழிலாளர் கூடி போராட்டம் நடத்திய இடத்தை இன்றும் ‘ஹர்த்தால் மொடக்கு’ என்று அழைக்கின்றனர்.

பெருந்தோட்டங்கள் அரசாங்கத்துக்கு சொந்தமாக இருக்கிற இடத்தும் ஒவ்வொரு தோட்டத்தின் பல்வேறு இடங்களிலும் தொழிலாளர்களின் பண்பாட்டைப் பிரதிபலிக்கும் அடையாளங்கள் மண்ணுக்கும் மக்களுக்குமான உறவினை சுட்டிக்காட்டுகின்றன. உதாரணமாகக், காமன் பொட்டல், பா(டை)டமாத்தி, நாட்டார் தெய்வங்களின் பெயரிட்டு அழைக்கும் இடங்கள் போன்றவற்றை கூறலாம்.

**ஏனைய இன மக்களுடனான பிணைப்பு**: தோட்டத் தொழிலாளர்கள் பெரும்பான்மைச் சிங்கள மக்கள் வாழுகின்ற பகுதிகளை ஒட்டி வாழுகின்ற இடங்களில் சிங்கள மொழியின் தாக்கம் மலையகத் தமிழர் களின் அன்றாட வாழ்விற் கலந்திருப்பதைக் காணலாம். உதாரணமாகத், தோட்டப் பெயர்களுக்குப் பின்னால் கந்த (செல்வ கந்த), வத்த (குயில் வத்த), கெல (கொட்டா கெல) போன்ற சொற்கள் காணப்படுகின்றன.

சிங்கள மொழிச் சொற்கள் தமிழிற் கலந்திருத்தக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. உதாரணமாக, உருலோசு (ஒரலோசு, கடிகாரம்), மங்கொள்ள (மங்கொள்ளய, வழிப்பறி), ரஸ்தாதி (ரஸ்தியாது, அலைக்கழிவு).

**மலையக இலக்கியம்:** தமிழக இலக்கியம், ஈழத்து இலக்கியம், புலம் பெயர்ந்தோர் இலக்கியம், தலித் இலக்கியம் என்பன போன்று மலையக இலக்கியம் என ஒரு இலக்கியத் தளமும் வளர்ந்துவருகின்றமை தமிழ் இலக்கியத் தளத்தில் மலையகத் தமிழர்களுக்கு ஒரு தனித்துவமான அங்கீகாரத்தை அளித்துள்ளது. இந்த இலக்கியத் தளத்தில் இன்று ஈடு படுபவர்களின் தொகையும் படைப்புக்களின் தரமும் உயர்ந்து வருகின் றன. மேலும் தேசிய, சர்வதேசிய இலக்கிய இதழ்களிலும் இணையத் தளங்களிலும் அதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

## மலையகத் தமிழர்கள் மீதான மொழி அடக்குமுறைகள்

இலங்கையின் முதலாளித்துவ பேரினவாத நடவடிக்கைகளால் அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு அம்சங்களிலே மலையகத் தமிழர்கள் வரலாற்று ரீதியாகப் பல்வேறு வகைகளில் தாக்கப்பட்டுள்ளதை நாம் காணலாம். மலையகத் தமிழர்களின் குடியுரிமை நீக்கம், இலவசக் கல்வி மறுப்பு, சிரிமா-சாஸ்த்ரி ஒப்பந்தம், தோட்டங்களின் தனியார் மயமாக்கம், பல பெருந்தோட்டங்கள் மூடப்பட்டதாலும் இனக் கலவரங் களாலும் தொழிலாளர்கள் தங்களது வாழ்விடங்களை விட்டு துரத்தப் பட்டமை போன்ற பல்வேறு சம்பவங்களை உதாரணமாகக் கூறலாம். மலையகத் தமிழர்களின் வரலாறு நெடுகிலும், மலையகத் தமிழர்களின் இனச் செறிவையும் அடையாளத்தையும் இல்லாதொழிக்கப் பேரினவாதச் சக்திகள் திட்டமிட்டுச் செயற்பட்டு வருவதுடன் அதில் வெற்றியும் கண்டுள்ளன. 1950களில் இலங்கையின் 12% மக்கள் தொகையுடன் இரண்டாவது தேசிய இனமாக இருந்த மலையகத் தமிழர்களின் இன விகிதாசாரம் இன்று 5%ஆகி நான்காம் இடத்திற்குத் தள்ளப்பட்டுள்ளது.

மலையகத் தமிழர்களின் இன அடையாளத்தை இல்லாதொழிப்பதில் மொழி அடையாளங்களை ஒழிப்பதும் அவர்களுக்குள்ள மொழி உரிமை களை மறுப்பதும் போன்ற விடயங்கள், கடந்த காலங்களிற், பேரின வாதத்தின் திட்டமிட்ட செயல்களாக நடந்துவந்துள்ளன. பின்வரும் சில இனவாத நடவடிக்கைகளை அவற்றுக்கு உதாரணங்களாகக் கொள்ளலாம்

- 1940களில் கல்வி அமைச்சர் CWW கன்னங்கரா இலங்கையில் இலவசக் கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்திய போது அது தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு மறுக்கப்பட்டது. இது மொழி ரீதியாக இம் மக்களின் உரிமை மறுக்கப்பட்ட முக்கிய சம்பவமாகும். முலையகச் சமூகத்தின் அபிவிருத்திப் பின்னடைவிற்கு இத் துரோகமான பாகுபாடு ஒரு முக்கிய காரணமாகும்.

- மலையகத் தமிழர்களின் அடையாளத்தை இல்லாதொழிப்பதற்காக அவர்களின் வாழ்விடங்களில் உள்ள இடப் பெயர்களைத் திட்டமிட்டு அழித்தலும் திரிபுபடுத்தலும் அரச ஆவணங்களிற் சிங்களப் பெயர்களைப் பதிவுசெய்தலும் போன்ற நடவடிக்கைகள் திட்டமிட்டே நடந்திருக்கின்றன. பல பெருந்தோட்டங்களை அபிவிருத்தித் திட்டம் என்ற பெயரில் மூடித் தொழிலாளர்களை வெளியேற்றியதன் மூலம் மலையகத் தமிழர்களின் அடையாளங்கள் அழிக்கப்பட்டுப் பெரும்பான்மை இன மக்கள் குடியேற்றப்பட்டுள்ளனர். தோட்டத் தொழிலாளர்கள் அழைத்துவந்த பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இரட்டை பாதை பாரதெக்க எனவும் நோனாதோட்டம் நோனாவத்தையாகவும், கடுகஞ்சேனை கடியனெல்லையாகவும், சாமிமலை உதசங்க உயனவாகயும், நடுதோட்டம் கெலிவத்தவாகவும் மாற்றப்பட்டுள்ளது போன்ற பல உதாரணங்கள் உள்ளன.

- இலங்கையில் சட்டரீதியாகத் தமிழ் மொழி அமுலாக்கம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளபோதும், நடைமுறையில், மலையகத் தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் அது முழுமையாக இல்லாத நிலை தொடர்கின்றது. இதனால் அரசாங்கச் சேவைகளைத் தாய்மொழியில் பெறுவதிற் சிரமங்கள் உள்ளன. தமிழ் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறையால் அடையாள அட்டை, பிறப்பு, இறப்புச் சான்றிதழ்கள், திருமணச் சான்றிதழ் போன்ற அடிப்படை ஆவணங்களிலும் தொழிலாளர் தொடர்பான ஆவணங்களிலும் பெயர்கள் உட்பட்ட பல தகவல்கள் பிழையாகப் பதியப்படுகின்றன. இவை சட்டரீதியான சிரமங்களை மாத்திரமில்லாது அவர்களின் கௌரவரீதியான பிரச்சினைகளையும் ஏற்படுத்துகின்றது. ஒரு ஆணைப் பெண்ணாக (அல்லது மாறிப்) பதிந்தும் தோட்டப் பெயரையே ஆளின் பெயராகப் பதிந்தும் பெயரே இல்லது "no name" என்று பதிந்தும் உள்ள பிறப்பு சான்றிதழ்கள் காணப்படுகின்றன. ஆயிரக்கணக்கான மலையகத் தமிழர்கள், மொழி

சார்ந்த அரச நிர்வாகத் தவறுகளாலான சிரமங்களுக்குப் பல தசாப்தங்களாக முகங்கொடுத்து வருகின்றனர்.

- மாத்தறை, காலி, மொனராகலை, குருணாகல், கேகாலை, இரத்தினபுரி, மாத்தளை போன்ற பிரதேசங்களில் உதிரிகளாக கைவிடப்பட்ட நிலையில் வாழுகின்ற மலையக தமிழர்களிற் கணிசமானோர் தங்களது பாதுகாப்புக் கருதி இன, மத அடையாளங் களை மாற்றியுள்ளதும் பெரும்பான்மையினப் பாடசாலைகளில் கல்விகற்பதும் போன்ற நடைமுறைகளும் காணப்படுகின்றன.

## முடிவுரை

இலங்கையில் வாழும் தேசிய இனங்களில் ஒன்றான மலையகத் தமிழர்களின் இன, பண்பாட்டு, வரலாற்று அடையாளத்தைக் கட்டியெழுப்புவதில் மொழியின் பங்களிப்பு தனித்துவமானது. முலையகத் தமிழ் மக்கள் மத்தியில் பிரயோகத்தில் இருக்கும் மொழியில் அவர்களை அடையாளப்படுத்தும் சிறப்பம்சங்கள் காணப்படுகின்றன. இலங்கையின் முதலாளித்துவப் பேரினவாதம் மலையகத் தமிழர்களின் அடையாளத்தை இல்லாதொழிக்க அவர்களது மொழி அடையாளங்களைச் சிதைத்து வருகின்றது.

உழைக்கும் தொழிலாளி வர்க்கத்தை மையப்படுத்திய மலையகத் தமிழர்களின் இன, பண்பாட்டு அடையாளங்களையும் வாழ்வியிற் பிரதேசத்தையும் பாதுகாப்பதற்கு இலங்கையில் உள்ள அனைத்துத் தொழிலாளர்களும் வர்க்கரீதியாகக் குரல்கொடுக்கவேண்டிய தேவை இருக்கின்றது. மேலும் சாதாரண தோட்டத் தொழிலாளர்கள் அரசாங்கத்தின் சேவைகளைத் தாய்மொழியில் பெற்றுக்கொள்வதற்கான சுதந்திரமான நடைமுறைச் சூழல் உருவாக்கப்படவேண்டும்.

*(நன்றி: **புது வசந்தம் 2013**, தேசிய கலை இலக்கியப் பேரவை)*

*****

# மலையக மக்களின் சுயநிர்ணய உரிமை

*சி. சிவசேகரம்*

மலையகத் தமிழர் 19ம் நூற்றாண்டு முதல் இலங்கையிற் குடியேறித் தம்மை இந்த நாட்டில் நிலையாக இருத்திக்கொண்டதன் மூலம் தம்மை ஒரு தேசிய இனமாக நிலைநிறுத்திக் கொண்டோராவர். தமிழருடனும் முஸ்லிம்களுடனும் ஒரே மொழியைப் பகிர்ந்து கொண்டுள்ள போதிலும், மலையகத் தமிழர்களுடைய தனித்துவமானதும் சோகம் மிக்கதுமான வரலாற்றுப் பின்னணியில் வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து தொலைவில் அவர்களின் இருப்பு அமைந்தமை போகத், தமிழருடன் பெருமளவிலான இனக் கலப்பிற்கு வாய்ப்பில்லாது போகுமாறு வர்க்க, சாதி வேறுபாடுகளும் கவனித்துக்கொண்டன.

எனவே அவர்கள் மலையகத்தின் பல்வேறு பகுதிகளிற் பரவி வாழ்ந்தாலும் மொழி, பண்பாடு என்ற அடிப்படைகளிலும் பொருளாதார அரசியற் சூழல்களின் பொதுமையாலும் தமது தனித்துவத்தைப் பேணிக்கொண்டனர். தொடக்கத்தில் அவர்கள் மீது இந்திய அடையாளம் ஒன்றைத் திணிக்கும் முயற்சிகள் ஓரளவு வென்றாலும் காலப் போக்கில் அந்த அடையாளம் பொருளற்றது என்பது பரவலாக ஏற்கப்பட்டுவிட்டது. எனவே கடந்த அரை நூற்றாண்டுக்குள் அவர்களுடைய அடையாளம், இலங்கை என்ற நாடும் அவர்களிற் பெரும்பாலோரினது வாழிடமும் குறிக்கும் ஒரு அடையாளமாகியுள்ளது. இப் பின்னணியிலேயே அவர்களுடைய அரசியல் வரலாறும் ஒரு தேசிய இனமாக அவர்கள் விருத்தி பெற்றமையும் கவனிக்கப்படவேண்டும்.

1947இல் நடந்த அவர்களது குடியுரிமைப் பறிப்பு அவர்களை இலங்கையின் அரசியல் நீரோட்டத்தினின்று துரிதமாகவே ஒதுக்கிவைத்தபோதும், நாட்டின் பொருளாதாரத்துக்கு அவர்களுயை பங்களிப்பிள் முக்கியத்துவம் அவர்களை முற்றாகப் புறமொதுக்க இயலாத ஒரு சூழ்நிலையை உருவாக்கியது. எனினும்

பேரினவாதத்தின் எழுச்சியும் பாராளுமன்ற இடதுசாரி அரசியலின் சீர்குலைவும் மட்டுமன்றி மலையகத் தொழிற்சங்கத் தலைமைகளது சந்தர்ப்பவாத மேட்டுக்குடி நலன் பேணும் செயற்பாடுகளும் ஒரு வலிய உழைக்கும் வர்க்கமாக அவர்களுடைய சமூக அரசியல் ஆற்றல் புலப்படத் தடையாயின.

இத்தகையதொரு பின்புலத்திலேயே 1965இல் மிகவும் மோசமான மனிதஉரிமை மீறலாகவும் சனநாயகவிரோத ஏற்பாடாகவும் சிரிமா-சாஸ்த்ரி உடன்படிக்கை எனும் ஏற்பாடு உருவானது. மலையகத் தமிழ் மக்களிற் பெரும்பாலானோரை, அவர்களுடைய தனிப்பட்ட, பொதுவான விருப்புக்களைக் கணிப்பிற் கொள்ளாமல், இந்தியாவுக்கு நாடுகடத்துவதற்கு உடன்பாடு காணப்பட்டது. 1974இல் ஏற்பட்ட சிரிமா-இந்திரா உடன்படிக்கை, சிரிமா-சாஸ்த்திரி உடன்படிக்கையின் விடுபாடுகளை நிறைவு செய்தது. அதன் பின்னர், 1974க்குப் பிற்பட்ட காலத்தில், தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டதன் பயனாக ஏற்பட்ட புதிய இனவாத ஒடுக்குமுறைகளும் வரட்சியின் பயனான வேலையின்மையும் சேர்ந்து மலையகத் தமிழரிற் கணிசமானோரை இந்தியாவுக்கு அனுப்பின. 1974-75 அளவில் மலையகத்தில் தலைவிரித்தாடிய பஞ்சமும், அவர்களை இந்தியாவுக்கு அனுப்ப உதவியதுடன், பிழைப்புத் தேடி வடக்கே வன்னிப் பகுதிக்குக் கணிசமானோரைப் புலம் பெயர்த்தது. இத்தனைக்கும் பிறகும் மலையகத் தமிழர் என்ற அடையானம் வலுவுடன் இருப்பது உற்றுநோக்கத்தக்கது.

தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் பயனாக, சிரிமா-சாஸ்த்திரி சிரிமா-இந்திரா உடன்படிக்கைகளின் அடிப்படையிவ் வாக்குரிமை பெறத் தொடங்கியோருக்கும் மேலாக இலங்கையில் எஞ்சியிருக்கும் மலையகத் தமிழர் அனைவருக்கும் குடியுரிமை என்ற கருத்து வெற்றிபெற்று இன்று இலங்கையிலுள்ள மலையகத் தமிழர்கள் அனைவுருக்கும் குடியுரிமை உள்ளது. எனினும் கொலனி ஆட்சிக் காலத்தின் அடிப்படைக் குறைபாடுகள் களையப்படாமலே உள்ளன.

கொலனி ஆட்சியின் போது, “இந்தியத் தமிழர்” என அறியப்பட்ட மலையகத் தமிழர்கட்குக் குடியுரிமை இருந்தது. ஆனாலும் தோட்டப் பகுதிகளிலே தோட்டத் தொழிலாளராக வாழ்ந்துவந்த மலையகத் தமிழருக்குச் சொந்தமாக வீடோ தோட்டமோ காணியோ வைத்திருக்க உரிமை இருக்கவில்லை. ஆவர்கள் வாழ்ந்துவந்த எந்த ‘லைன்’

(லயம்) குடியிருப்புக்கும் அஞ்சல் நிலையத்தில் பதியப்பட்ட முகவரியும் இருக்கவில்லை.

1947இல் நடந்த குடியுரிமைப் பறிப்பு இந்த நிலை தொடர்வதை வசதிப்படுத்தினாலும், முற்றாகக் குடியுரிமை பெறப்பட்ட சூழ்நிலையிலும் அதே உரிமை மறுப்புக்கள் தொடருகின்றன. சாதி அடிப்படையிலும் பொருளாதார அடிப்படையிலும் வீட்டுக்கும் காணிக்கும் உரிமையற்றிருந்த பிற சமூகத்தினருக்குப் பலவேறு சமூகச் சீர்திருத்தச் சட்டங்கள் மூலமும் அரசாங்க நடவடிக்கைகள் மூலமும் அந்த உரிமைகள் பெருமளவும் வாய்த்துள்ளன. ஆனால் மலையகத் தமிழருக்கு அவை திட்டமிட்ட முறையில் தெடர்ந்தும் மறுக்கப்பட்டு வருகின்றன.

மலையக மக்கள் தனிமனிதர்களாகவும் ஒரு சமூகமாகவும் மேற்கூறியவற்றாற் பாதிக்கப்படுகின்றனர். கல்வியும் உயர் தொழில் வாய்ப்புக்களும் மட்டுமன்றி அடிப்படையான போக்குவரத்து, பொதுச் சுகாதாரம் போன்ற வசதிகளும் அவர்கட்கு மிகத் தாழ்ந்த நிலையிலேயே உள்ளன. மிகவும் பிற்படுத்தப்பட்ட நிலையில் வைக்கப்பட்டிருந்த சமூகத்தினர் என்றளவில் மலையகத் தமிழருக்குச் சிறப்புச் சலுகைகள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். மாறாக அவர்களது உரிமை மறுப்புத் தொடர்கிறது.

மலையகத் தமிழ்ச் சமூகத்தின் அரசியல் விழிப்புணர்வின் போதாமை காரணமாக அவர்களுடைய உரிமைகட்கான போராட்டங்கள் சரிவர முன்னெடுக்கப் படாமையையும் நாம் காண முடிகிறது. இப் பின்னணியிலேயே அவர்கயுடைய பிரதேச அடையாளத்தையும் அவர்களிற் பெரும்பாலோரின் வாழ்வாதாரமான பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையையும் அவர்கட்கு மறுக்கிற காரியங்கள் பேரினவாத ஆடசியாளர்களால் நேரடியாகவும் மறைமுகமாகவும் முன்னெடுக்கவும் ஊக்குவிக்கவும் படுகின்றன.

இந்த இடத்திலே தான் மலையகத் தமிழர் இலங்கையின் ஒரு தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கான கடுந் தேவை எழுகிறது. அக் கோரிக்கையின் வெற்றியை ஒட்டியே அவர்களுடைய அடிப்படை உரிமைகளுக்கான —வீடு, காணி, கல்வி, சுகாதாரம், உயர் தொழில், போக்குவரத்து ஆதியவற்றுக்கான— கோரிக்கைகள் உரிய வலுவுடன் வலியுறுத்தப்படக்கூடும்.

தேசிய இனமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துவதாவது, சுயநிர்ணய உரிமையை வலியுறுத்துவதாகவும் இங்கு அமைகிறது. அதாவது மலையகத் தமிழர் தமது தேசிய இருப்பைச் சுயாதீனமாகத் தீர்மானிக்கும் உரிமையுடையோர் என்பது ஏற்கப்பட வேண்டும். அவர்களுடைய குடிப்பரம்பலுக்கும் சனத்தொகைச் செறிவிற்கும் அமைய, அவர்கட்கான சுயாட்சிகளும் சுயாட்சி அலகுகளும் அவர்களுக்கு ஏற்புடைய முறையில் நிறுவப்பட வேண்டும்.

ஒரு தேசிய இனம் என்ற முறையில், மலையகத் தமிழர் சுயநிர்ணய உரிமை உடையோராகின்றனர். அவர்கட்குப் பிரிந்து போகும் உரிமையை யாரும் வழங்கினாலும் பிரிந்து போவது என்பது நடைமுறைச் சாத்தியமற்றது. எனினும் அவர்கட்கான சுயாட்சிகள் எத்தகையன எனவும் அவற்றுக்கான அதிகாரங்கள் அவை எனவும் முடிவு செய்வதில் அவர்கட்குப் பிற தேசிய இனங்கட்குச் சமமான பங்கு இருக்க வேண்டும். அவர்களுடைய பிரதேச அலகுகள் சிலவற்றில் பிற தேசிய இனத்தோருடன் இணைந்து வாழும் தேவை இருக்கலாம். முழுமைப்படுத்தப்பட்ட சுயநிர்ணய உரிமை, அது அவர்களுடைய சுயாதீனமான தெரிவாக அமைவதை உறுதிப்படுத்துகிறது.

இத் தொடர்பில் இலங்கையின் தேசிய இனப் பிரச்சனையை முழுமையாக நோக்கும் போது, அதை வெறுமனே சிங்கள, தமிழ்த் தேசிய இனங்களின் பிரச்சனையாக நோக்குவது, பிரச்சனையின் ஒரு பகுதியையே தீர்க்குமென உணர்வோம். எனவே தொடர்ச்சியான பெரிய நிலப்பரப்பொன்றுக்கு உரிமை கோரக் கூடிய சிங்கள, தமிழ்த் தேசிய இனங்கள் மட்டுமன்றித் தமக்கான தொடர்ச்சியான பெருநிலப்பரப்பற்ற போதும் பொதுவான மொழி, பண்பாட்டு, அரசியல் வரலாற்றுப் பொதுமைகளையுடைய முஸ்லிம், மலையகத் தமிழ்த் தேசிய இனங்களினதும் சுயநிர்ணயமும் சுயாட்சியும் என்ற அடிப்படையில் மட்டுமே தேசிய இனப் பிரச்சனைக்கு நிலைக்கக் கூடிய நல்ல தீர்வொன்றைக் காண இயலும்.

அதனாலேயே, மலையகத் தமிழ் மக்கள் தனித்துவமான ஒரு தேசிய இனம் என்பதை அரசு ஏற்க வேண்டும் என்பதை முக்கியமான ஒரு அரசியற் கோரிக்கையாக இன்று முன்னெடுக்க வேண்டியுள்ளது.

*****

# புரட்சி

*ஓட்டோ ரெனே கஸ்ற்றியோ*

காண முடியாதவர்கள்
எங்களைக் குருடர்கள் என்கிறார்கள்
ஆனால் — இனிவரும் காலத்தின்
நிறத்தைக் காண
நீ எங்களுக்குக் கற்பித்திருக்கிறாய்

கேட்ட முடியாதவர்கள்
எங்களைச் செவிடர்கள் என்கிறார்கள்
ஆனால் — விரைவூக்கமான மனித மென்மையின்
ஒலியை எவ்விடத்துங் கேட்க
நீ எங்களுக்குக் கற்பித்திருக்கிறாய்

கோழைகள் எங்களைக்
கோழைகளென அழைக்கிறார்கள்
ஆனால் — உன்னோடு நாம்
நிழல்களை எதிர்கொண்டு
அவர்களது முகங்களை மாற்றுகிறோம்

குற்றவாளிகள் எங்களைக்
குற்றவாளிகளென அழைக்கிறார்கள்
ஆனால் —

குற்றம், விபச்சாரம், பசி என்பவற்றிற்கு
முடிவு கட்டியபடி
உன்னோடு நாம்
நம்பிக்கையைப் புதுப்பிக்கிறோம்

மனித நேயத்தின் இதயத்தின் மீது
நாங்கள்
கண்களும் காதுகளும் குரலும் ஆன்மாவும்
வைத்தோம்

இனவாதிகள் எங்கள் மனிதநேயமற்றவர்கள் என்றார்கள்
ஆனால் — உன்னோடு நாம்
அரவணைப்பின் நகரத்தில்
வெறுப்புக்கு அதன்
உலகளாவிய கல்லறையைக் கொடுக்கிறோம்

அவர்கள் எங்களைப் பலவாறு அழைக்கிறார்கள்
அவ்வாறு உச்சரிப்பவர்கள் —
நாளை
அவர்களது பேரப்பிள்ளைகள்
விண்மீன்கள் செறிந்த உனது பெயரான
புரட்சி எனும் அந்தச் சொல்லைக்
கொண்டாடி நேசிப்பார்கள் என்பதைத்
தங்களது மடமையால்
மறந்துவிடுகிறார்கள்.

*(தமிழில்: தெ. ஞா. மீநிலங்கோ)*

# போரும் பெற்றோரும்

**டேவிட் றொபேர்ஸ்**

பெற்றோரெவரும்
ஒரு பிள்ளையைப் புதைக்க நேரலாகாது

அது இயற்கை விதியை முரணாக்குகிறது

ஆனாற் போருக்குச் செல்லும் பிள்ளைகட்கு
அது வழமை.

அதினும் அதிகமாக

அவர்கட்குப்
பலியாவோருக்கு.

*[ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு: சி. சிவசேகரம்]*

**ஆங்கிலேயப் படைப்பாளியான டேவிட் றொபேர்ஸ் (David Roberts) ஒக்ற்றோபர் 1942இற் பிறந்தவர். யூகோஸ்லாவியா, பலஸ்தீனம் உட்படப் போரும் அமைதியும் பற்றிய விடயங்களில் கடந்த 20 ஆண்டுகளாக அவர் தொடர்ச்சியான அக்கறை காட்டி வருகிறார்.**

*புதிய-ஜனநாயக மாக்சிய-லெனினிசக் கட்சிக்கு நிதி உதவ விரும்புவோர் பின்வரும் வங்கிக் கணக்கிற்கு வழங்கி உதவலாம்.*

***K. Senthivel அல்லது V. Mahendran, Account Number 1570018335 Commercial Bank, Grandpass Branch, Colombo 14, Sri Lanka***